
# ஜாமக்காரன்

WATCHMAN



காவல்காரன்

(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



**கர்த்தருக்குள் அன்பானவர்களே,**

கர்த்தரின் பெரிதான கிருபையினால் என் வெளிநாட்டு ஊழியங்களை முடித்து சுகத்தோடு இந்தியா திரும்ப கர்த்தர் எனக்கு கிருபையை அருளினார்.

என் மனைவி ஒரு மாதம் நீங்கள் எழுதிய கடிதங்கள், இ-மெயில்களின் விவரங்களை ஜெபத்துக்காக எனக்கு ஒவ்வொரு நாளும் நான் தொலைபேசியில் தொடர்புக்கொள்ளும்போது அவர் எனக்கு அறிப்பார். அன்று இரவே அந்தந்த ஜெபகுறிப்புகளுக்காக ஜெபித்துவிடுவேன்.

நான் இந்தியாவில் இல்லாத நாட்களிலும் நீங்கள் அனுப்பிய காணிக்கைகள் அனைத்துக்கும் என் மனைவியே ரசீது அனுப்பி சிலருக்கு பதிலும் எழுதி என் வேலை சுமையை குறைத்து உதவினார்.

' என் வெளிநாடுகளின் ஊழிய விவரங்களை உள்ளே மற்ற பக்கங்களில் எழுதியிருக்கிறேன்.

' திரும்பி பார்க்கிறேன் என்ற தலைப்பில் என் ஆரம்ப கால அனுபவங்களை குறிப்பாக வாலிப பிள்ளைகளுக்கு எழுதிய ஆலோசனைகளை வாசித்து ஏராளமான வாசகர்கள் பயன் அடைந்த விவரத்தைக்கேட்டு தேவனைத்துதிக்கிறேன். இதில் ஆயர்களும் பயன் அடைந்தார்கள் என்பது சந்தோஷம். அந்த அனுபவங்களை எல்லாம் மொத்தமாக புத்தக வடிவில் வாசகர்களாகிய உங்களுக்குதான் இலவசமாக அனுப்புவேன். நீங்கள் எழுதிக்கேட்டாலும், கேட்காவிட்டாலும் நான் ஜாமக்காரனின் எழுதிய **அந்நியபாஷை குழப்பம்** முதல்கொண்டு இப்போது கூறிய **திரும்பி பார்க்கிறேன்** வரை உள்ள அத்தனையும் என் விலாச பட்டியலில் உள்ள அனைவருக்கும் இலவசமாக அனுப்புவேன். பல விஷயங்கள் முழுமை பெறாமல் இருப்பதால் அவைகளை புத்தமாக்க தயாரிக்க இயலவில்லை. **அந்நியபாஷை குழப்பம்** எழுதி முடித்தும் பக்கங்களை குறைத்து வெளியிடும் பணிதொடங்க எனக்கு நேரம் கிடைக்கவில்லை. இப்போது ஜாமக்காரனை மாதந்தோறும் அனுப்பவேண்டிய

## நவம்பர் 2015

**கட்டாயத்தில் தள்ளப்பட்டதால் அறவே நேரம் இல்லாமல் போயிற்று. கர்த்தரின் உண்மையான ஊழியர்களும் வேத பண்டிதர்களும் எழுதிய எல்லா செய்திகளும் எழுத்து வடிவில் வந்தால் ஊழியக்காரர்கள் மரித்தாலும் அந்த புத்தகங்கள் உலகம் உள்ளவரை பேசும் என்பதை நான் அறிவேன். ஆகவே சீக்கிரமே அந்த முக்கிய வேலையை முடிக்க கர்த்தர் எனக்கும் கிருபை அருளுவாராக.**

' **மணியாடர், இ-மெயில், ஆன்-லைன் மூலமாக காணிக்கை அனுப்பிய யாவருக்கும் என்னுடைய வாழ்த்துதல்களையும், நன்றியையும் அறிவிக்கிறேன்.**

' **தொடர்ந்து ஜாமக்காரன் வாசகர்கள் குடும்பத்தினர் அனைவருக்காவும் ஜெபிக்கிறேன். நீங்களும் தொடர்ந்து ஜெபியுங்கள்.**

**தேவ கிருபையும், சமாதானமும் உங்களோடு இருப்பதாக. ஆமென்.**

**கர்த்தரின் உன்னத பணியில்**

**✍ டாக்டர். புஷ்பராஜ்**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## விலாசம் புதுபித்தல்:

**ஜாமக்காரன் புதிய விலாச பட்டியல்** ஏறக்குறைய முழுவதுமாக தயாரிக்கப்பட்டு விட்டது. விலாசம் புதுப்பிக்கும் கார்டை அல்லது ஜாமக்காரன் வேண்டும் என்று விண்ணப்பிக்கும் கடிதங்களை வைத்து **புது விலாச பட்டியல்** தயாரித்துள்ளோம்.

பழைய வாசகர்களை நாங்கள் இழக்க விரும்பவில்லை. இரண்டுமுறை ஜாமக்காரன் மூலம் விலாசம் புதுப்பித்தல், ஞாபகமூட்டல் அறிவிப்பை எழுதியும் சிலர் கவனிக்கவில்லை. ஆனால் இவர்களெல்லாம் இப்போது மிக தாமதமாக ஒவ்வொருநாளும் நாங்கள் அறிவிப்பை கவனிக்கவில்லை என்றும், எங்கள் விலாசத்தை மறுபடியும் சேர்க்கவேண்டும் என்றும், ஏராளமானவர்கள் எங்களுக்கு எழுதிக்கொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் பெயர்களை நாங்கள் புதிய விலாச பட்டியலில் உள்ள **புதிய அங்கத்தினர் விலாசப்பட்டியலில் இணைத்து** அவர்களுக்கு ஜாமக்காரனை அனுப்ப ஆரம்பித்துவிட்டோம்.

புதிதாக யாராவது ஜாமக்காரன் தங்களுக்கும் வேண்டும் என்று விரும்பினால், உங்கள் முழு விலாசத்தையும் எங்களுக்கு எழுதி விண்ணப்பித்தால் உடனே விலாசப்பட்டியலில் நேரிடையாக **அவர்கள் விலாசத்தை** இணைத்துக்கொள்வோம்.

எங்கள் வாசகர் குடும்பத்தில் ஒருவராக அவர்களை இணைத்துக்கொள்வதில் நாங்கள் சந்தோஷப்படுகிறோம். அவர்களுக்காக ஜெபிப்பதிலும் தொடர்ந்து கவனம் செலுத்துவோம்.

புதிய விலாசப்பட்டியலுக்கு நாங்கள் கேட்டுக்கொண்டப்படி அவரவர்களின் விலாசங்களை எங்களுக்கு எழுதியும், பழைய விலாசத்திலுள்ள தவறுகளையும் குறிப்பிட்டு, தெளிவாக எங்களுக்கு கடிதம்,இமெயில் மூலமாக எழுதி இந்த புது விலாசப்பட்டியலை தயாரிக்க எங்களோடு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

**புதிய விலாசத்துடன்** இனி எங்களோடு தொடர்புக்கொள்ளவும், மறக்காமல் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் **கணணி எண்ணையும்** எழுதவும்.

**- (ஜாமக்காரனுக்கு சந்தா ஏதும் இல்லை).**

# என் வெளிநாட்டு ஊழியங்கள்



## அமெரிக்கா, இங்கிலாந்து, அயர்லாந்து, அபுதாபி



**2015 அக்டோபர் முதல் நவம்பர் 6ம் தேதிவரை அமெரிக்காவில் உள்ள New York, IOWA, Chicago ஆகிய இடங்களிலும், கனடா நாட்டிலும், அரேபியாவில் Abu Dhabi(UAE)நாட்டிலும், இங்கிலாந்தில் Middlsex,London ஆகிய நகரங்களிலும், அயர்லாந்து நாட்டிலுமாக ஒரு நீண்ட பயணம் செய்து ஆரோக்கியத்தோடும்,ஊழியத்தை வெற்றியுடனும் செய்து இந்திய தேசத்துக்கு திரும்பினேன்.**

என்னை **அமெரிக்கா** விமான நிலையத்திலிருந்து அதிகாலையில் என்னை அழைத்து தன் வீட்டில் தங்கவைத்து உபசரித்த நல்ல ஆவிக்குரிய குடும்பம் **டாக்டர்.எட்வின் டேனியல்** அவர்களின் குடும்பம் ஆகும்.




இப்போது இவர்கள் நம் டிரைபல் மிஷன் ஊழியங்களுக்கு நிரந்தர பங்காளராக பெரும் தொகை காணிக்கையாக கொடுத்து **டாக்டர்.முரளிதர்** அவர்களுடன் நான் பேசி முடித்தவுடனே தாமதமில்லாமல் தொடர்புக்கொண்டு அந்த சிறந்த மிஷனரி பணிக்கும், ஆதிவாசிகள் **பிள்ளைகள் படிப்புக்கும், ஆதிவாசிகளின் ஆஸ்பத்திரிக்கும்** உடனடியாக தன் பேங்கிலிருந்து பெரும்தொகையை டிரைபல் மிஷனுக்கு டிரான்ஸ்பர் செய்து உதவி இனி தொடர்ந்து இந்திய மிஷனரி ஊழியத்தை தாங்குவதாக அவர் அவருடைய மகள்,மகன், துணைவியார் யாவரும் வாக்களித்து செயல்பட்டது அவர்களின் உண்மையான பாரத்தை காட்டியது. கர்த்தர் அந்த குடும்பத்தை ஆசீர்வதிப்பாராக.

நான் இந்திய நாடு திரும்பும்வரை **என் மனைவி.மங்களவதனி** அவர்கள் என் அலுவலக பொறுப்புகளை ஏற்று பத்திரிக்கைகள் அனுப்பபடுவதில் எந்த தடைகளும் இல்லாமல் வீட்டு பொறுப்புகளையும் கவனித்து திறம்பட நடத்தி உதவினார்.

எல்லா நாடுகளிலும் நான் சென்றபோது நாட்டுக்கு நாடு உள்ள சீதோஷ்ன நிலைகளின் மாற்றங்களிலும் என் ஆரோக்கியத்தில் ஒரு பிரச்சனையும் வராமல், சாதராண ஜலதோஷத்திலும் (தடமன்) நான் பாதிக்கப்படாமல் கர்த்தர் என்னை சுகத்தோடும்,பெலத்தோடும் பாதுகாத்த தேவனுக்கு துதி ஏறெடுக்கிறேன்.

## IOWA மாநிலம் சென்றேன்.:

அமெரிக்கா IOWA மாநிலத்தில் என் நீண்டகால நண்பரும்,**அமெரிக்க மெத்தடிஸ்ட் சபை** போதகருமான **டாக்டர்.டேனியல்** அவர்கள் இலங்கை,இந்தியா,ஆப்பிரிக்க ஆகிய நாடுகளுக்கு ஏராளமான பண உதவிகளை தன் சபைகள்மூலம் செய்து உதவினார்.சமூக சேவை, ஸ்தாபனம் தொடங்கியவர், அனாதை பிள்ளைகளை வளர்த்து ஸ்தாபனம் ஆரம்பித்தவர்.



ஆனால் இவரிடம் பணம் பெற்றவர்கள் அத்தனைபேரும் தங்கள் பெயர்களில் நிலத்தையும் கட்டிடத்தையும் வாங்கிக்கொண்டதால் இவரை அடியோடு ஏமாற்றிவிட்டனர். இவர் மிகவும் நம்பிய இவர்கூட பிறந்த சகோதரியே இவரை ஏமாற்றி விட்டதை இவரால் தாங்கிக் கொள்ள முடியாமல் நொடிந்து போய்விட்டார். இவர் பிள்ளைகள் எல்லாரும் நல்ல ஊழியம் செய்கிறார்கள். இம்முறை நான் அமெரிக்காவில் IOWA மாநிலம் சென்று அவருடன் பேசி ஜெபித்து ஆறுதல்படுத்தி வந்தேன்.

# கனடா நாட்டு ஊழியங்கள்

## சில பிசாசின் தடைகள்:

இந்தமுறை போய்வந்த வெளிநாடுகளிளே **கனடா** நாட்டு ஊழியம் என் மனதுக்கு மிகவும் திருப்திகரமாகவும்,சந்தோஷம் அளிக்க கூடியதாகவும் அமைந்தது. முதல் காரணம் கூட்டம் நடத்தியவர்கள் செய்திக்கு முக்கியத்துவம் அளித்ததும், கூட்டத்தில் கலந்துக்கொண்டவர்கள் அனைவரும் ஆடாமல் அசையாமல் பிரசங்கத்தை கவனித்த விதமும் என்னை மிகவும் கவர்ந்தது. அதனால் எனக்கு தெரிந்த வேத சத்தியம் அனைத்தையும் தடையேதும் இல்லாமல் அவர்களோடு பகிர்ந்துக்கொள்ளமுடிந்தது.

**கனடா ஊழியத்தில்** தடையிருந்ததா என்று நான் பிரசங்கிக்க சென்ற அடுத்த நாடுகளில் கேட்டார்கள். அவர்கள் யூகித்ததைப்போல் நான் கனடா வருவதற்கு முன்பே கனடாவில் நான் பேச தடை உண்டாக்க முயற்சி செய்வதவர்கள் உண்டு.

தமிழ் பெந்தேகோஸ்தே சபைகளின் ஐக்கியம் என்று ஒரு ஸ்தாபனம் கனடாவில் இருப்பதாக அறிந்தேன். அவர்கள் குறிப்பாக சில இந்திய ஊழியர்களை கனடாவில் உள்ள சபையார் யாரும் கனடா நாட்டுக்கு **பிரசங்கம் செய்ய அவர்களை அழைக்கக்கூடாது** என்றும், அப்படி அவர்களை அழைத்து உபயோகிக்கும் சபைகள் இனி கனடா நாட்டில் தொடர்ந்து இயங்காதபடி அவர்களின் சபையை கலைக்க செய்வோம் என்று சில பாஸ்டர்மார்களை அந்த ஐக்கியத்தார் பயமுறுத்தியுள்ளதாக அறிந்தேன்.

1). சகோ.**அகஸ்டின் ஜெபகுமார்**(GEM), 2. சகோ.**சகரியா பூனன்**(Zack Poonan), 3. **டாக்டர்.புஷ்பராஜ்**(ஜாமக்காரன்)ஆகிய இவர்கள் பெந்தேகோஸ்தே சபைகளுக்கு விரோதமானவர்கள் என்றும் சகோ.**சகரியாபூனன்** அவர்கள் **தசமபாகத்தை** தாக்கி பேசுகிறார். அதனால் அவர் பெந்தேகோஸ்தே சபைகளின் வருமானத்துக்கு தடை உண்டாக்குகிறார் என்றார்கள்.

**சகோ.அகஸ்டின்ஜெபகுமார்** அவர்கள் தானே ஒரு பெந்தேகோஸ்தே சபை அனுபவம் உள்ளவராக இருந்தும் எல்லா பெந்தேகோஸ்தே சபைகளையும் அதில்உள்ள தவறுகளையும் கண்டித்து **மிகவும் இழிவாகவும்,தாக்கியும்** பேசுகிறார். இவருடைய பிரசங்கத்தில் பெந்தேகோஸ்தே சபைகளின்( குறிப்பாக கனடா பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்மார்களின் ஊழல்களை இவர் பகிரங்கமாக மக்களிடம் அறிவிப்பதால் கனடா சபைமக்கள் கனடாவில் உள்ள பாஸ்டர்களாகிய எங்களை மதிப்பதில்லை என்பது சகோ.அகஸ்டின்ஜெபகுமார் அவர்களைப்பற்றி அவர்கள் கூறும் குற்றச்சாட்டாகும்).

அடுத்து **டாக்டர்.புஷ்பராஜ்** ஆகிய என்னையும் என் **ஜாமக்காரன் பத்திரிக்கையில்** வரும் செய்திகளையும் அதில் **அந்நியபாஷையைப்பற்றி** டாக்டர் அவர்கள் மிக மோசமாக எழுதுவதாகவும் கூறி நம் இந்தியாவில் தமிழ்நாட்டு பிரபலங்களான மூவரணி ஊழியர்களான **நாலுமாவடி மோகன் சி.லாசரஸ்,ஏஞ்சல் டிவி சாதுசெல்வராஜ்,வின்செண்ட் செல்வகுமார்** ஆகியவர்களும் சகோ.**சாம்ஜெபதுரை** அவர்களும்,டாக்டர்.புஷ்பராஜ் அவர்களுக்கு (ஜாமக்காரனுக்கு) **குற்றம் சுமத்தும்ஆவி** உள்ளதால் அவர் பரிசுத்த ஆவியானவருக்கு எதிரானவர். **பரிசுத்த ஆவியானவரே இல்லை** என்று அவர் கூறுகிறவர் என்று இவர்கள் நால்வரும் என்னை குற்றம் கூறி எழுதி வருவதும், அதையே அவர்கள் தங்கள் பிரசங்கங்களில் கூறுவதையும் தங்கள் பத்திரிக்கையில் எழுதுவதையும் வாசகர்கள் யாவரும் அறிவீர்கள். இந்தியாவில் உள்ள இவர்களைப்போலவே கனடா பெந்தேகோஸ்தே சபை ஐக்கியத்தில் உள்ளவர்களும் என்னைப்பற்றி இவர் குற்றம் கூறுகிறவர் என்று கூறி இவர் யாவரையும் கனடா நாட்டுக்கும் வர அனுமதிக்கக்கூடாது. இவர்களை சபைகள் யாரும் உபயோகிக்கக்கூடாது என்று **எழுதப்படாத தடை** உத்தரவு பிறப்பித்தனர்.

## ஆதரவுகள்:

ஆனால் கனடாவில் உள்ள வசன அடிப்படையில் இயங்கும் **உண்மையான சபைகளின்** பாஸ்டரும், மூப்பர்களும், சில **பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்மார்களும்,** மேலே வாசித்த குறிப்பிட்ட **அந்த ஐக்கியத்தின் பாஸ்டர்கள்** பிறப்பித்த உத்தரவுக்கு பயப்படாமல் துணிந்து எங்கள் மூவரின் கூட்டங்களையும் கனடாவில் மிகவும் சிறப்பாக நடத்தி காட்டினார்கள்.

இந்தமுறை என்னை **கிரேஸ் காஸ்பல் தமிழ் சபை** (கனடா) சபையின் மூத்த ஊழியரும், சிறந்த பைபிள் ஆசிரியருமான **சகோ.நவாய் மனோகரன்** அவர்கள் அழைப்பு கடிதம் அனுப்பி கூட்ட ஏற்பாடுகளை செய்தார்.



எந்த சபை பெயரிலும் இக்கூட்டங்கள் நடத்தப்படாமல் எல்லா சபை மக்களும் கூட்டத்தில் கலந்துக் கொள்ளும் வகையில் ஒரு பொதுவான இடத்தில் **Toranto Free Presbyteran Chuch** என்ற கட்டிடத்தில் கூட்டத்தை ஏற்பாடு செய்து பத்திரிக்கை களிலும், வானொலியிலும் சிறப்பான விளம்பரம் கொடுத்து ஏற்பாடுகளை செய்திருந்தார்.



இந்த கூட்டங்கள் நடக்க முதல் காரணமாக இருந்தவர் சகோ.**டோமினிக்** அவர்கள் இவர்களுடன் இணைந்த நண்பர்களும், பாஸ்டர்களும் இக்கூட்டங்களை நடத்தி கர்த்தருக்கு மகிமையை வரப்பண்ணினார்கள் என்றால் அது மிகையாகாது.

## வானொலி பேட்டி:

கனடாவில் நடந்த கூட்டங்களுக்கு சிகரம் வைத்தார்போல் கனடாவில் பல வருடங்களாக வானொலி நிகழ்ச்சியை நடத்திக்கொண்டிருப்பவராக சகோ.**வின்செண்ட்** அவர்கள் தன் வானொலி நிகழ்ச்சியில் 1.1/4 மணி தியாலம் நேர்காணல் பேட்டி எடுத்து, லைவ்வாக நடத்தி அவர் கேட்ட கேள்விகளுக்கு நான் உடனடியாக பதில் கூறிய உடனே அதை கேட்கும் உலககெங்கும் உள்ள வானொலி நேயர்களை உடனே கேள்வி கேட்க வைத்தார். அந்த நிமிடமே பல நாடுகளிலிருந்து ஏராளமானவர்கள் உடனுக்குவுடனே என்னிடம் கேள்வி கேட்டார்கள். நானும் நேரிடையாக அவர்களுக்கு வானொலி வாயிலாக உடனே பதிலையும் கூறினேன். **ஜெர்மனி,மான்ட்ரியல்,சுவிஸ்,நார்வே,டொரேன்டோ** ஆகிய இடங்களிலிருந்தெல்லாம் மக்கள் கேள்விகளை கேட்டார்கள். அவர்கள் கேள்விகளுக்கு வசன விளக்கத்தோடு பதில் கூறினேன்.

விமான நிலையத்திலிருந்து நான் ஓய்வு எடுக்காமல் முகம்கூட கழுவாமல் நேராக வானொலி நிலையத்துக்கு(Relay Studio)சென்று பேட்டியளித்தது நிலைய பொறுப்பாளர் களுக்கும் மற்றவர்களுக்கும் மிகுந்த ஆச்சரியத்தை கொடுத்தது.

அதில் **அந்நியபாஷை,ஆவியில் கீழே விழுதல்,ஜெபத்தில் பெயர் அழைத்தல்** போன்ற கேள்விகளுக்கு பதில் அளித்து இப்படிப்பட்ட ஊழியர்களை குறிப்பிட்டு இயேசுகிறிஸ்து மத்தேயுசுவிசேஷத்தில் குறிப்பிட்ட **கள்ளஊழியர்கள்** இவர்கள்தான் என்பதை பட்டவர்த்தனமாக

நான் கூறி ஒரு கலக்கு கலக்கினேன். அதன்பின் கனடா நாட்டில் நான் பிரவேசித்தது கனடாவில் உள்ள பெந்தேகோஸ்தே சபையினருக்கும் பாஸ்டருக்கும் பெரும் அதிர்ச்சி வைத்தியமாக இருந்தது.

அந்த வானொலி பேட்டிமூலம் நான் கனடா நாட்டில் நுழைந்துவிட்டேன் என்பதை முழு கனடா நாட்டு அனைத்து வீடுகளிலும் அந்த வானொலி பேட்டியானது பெரும் விளம்பரமாக மாறியதை அறிந்து தேவனை துதித்தேன்.

அந்த வானொலி அறிமுகமே **டாக்டர்.புஷ்பராஜ்** அவர்கள் கனடா நாட்டுக்குள் பிரவேசித்துவிட்டார் என்று **கனடா நாட்டு மக்களுக்கு** பறைசாற்றி நடக்க இருந்த எல்லா கூட்டங்களுக்கும் ஏராளமான ஜனங்களை அழைத்து வர உதவியாக இருந்தது.

## மற்றொரு சிறப்பு:

**நான் கனடா** நாட்டில் நான் பேசின ஒவ்வொரு செய்தியும் கூட்டம் முடியும் முன்பே DVDயாக,CDயாக சுடசுட எல்லாருடைய கைகளிலும் கிடைக்க செய்தது கூட்டத்துக்கு மகுடம் வைத்ததுபோல் ஆனது.

**சகோ.Jude Kumar** அவர்கள் அரசங்கம் பணியில் இரவும்-பகலும் வேலை செய்த அந்த களைப்பும் பாராமல் வீடியோ எடுப்பதை ஒரு ஊழியமாக செய்து இலவச மாகவும் DVDகளை மக்களுக்கு கொடுத்தது அற்புதமான ஊழியமாகும்.

அந்த DVDயில் அந்தந்த நாளில் நான் பேசிய செய்திகளின் **தலைப்பும்,என் புகைப்படமும்** பிரின்ட் செய்து DVDயில் பதியவைத்து கொடுத்தது. மிக சிறப்பான ஏற்பாடாகும்.

இனி **கனடா** நாட்டுக்கு நான் வந்தாலும், வராமல்போனாலும் அந்த DVDக்கள் தொடர்ந்து மக்களோடு பேசும். இதில் குறிப்பாக சனிக்கிழமை **பகல் கேள்வி-பதில்** நேரம் சுமார் 3 மணி தியாலம் இடைவெளியிலில்லாமல் சென்றது.

அங்கு வந்த எல்லாருடைய கேள்விகளுக்கும் பதில் அளித்தது ஒரு **சரித்திர நிகழ்ச்சி யாகும்.** அந்த கேள்வி-பதில் DVDயில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அது பலருடைய சந்தேகத்தை தீர்க்க வல்லது.

‘ விரைவில் அவைகள் யாவும் U-TUBE ல் வெளியிடுவார்கள் என்று நம்புகிறேன். தேவையானவர்கள் அவைகளை டவுன்லோட் செய்து மற்றவர்களுக்கு விநியோகிக்கலாம்.

ஆனால் **அமெரிக்காவிலிருந்து** ஊழியத்தை ஆரம்பித்து இடைவெளியில்லாமல் நான் தொடர்ந்து கன்வென்ஷனில் பேசிக்கொண்டேயிருந்ததால் **கனடா** கூட்டங்களில் எங்கும் என்னால் **பாட்டுபாடமுடியாமல்** போனாது.

கனடா சபை மக்கள் என் பழைய பாடல்களை கேட்க ஆசைப்பட்டார்கள். ஆனால் என்னால் பாடமுடியவில்லை.

இம்முறை கனடா மலையாள சபைகளுக்கு தேதிகள் கொடுக்க இயலவில்லை என்ற குறை மலையாளிகளுக்கு உண்டு.

என்றாலும் **கனடா ஊழியம்** பெருத்த வெற்றியுள்ள ஊழியமாக அமைந்தது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

அங்கு தடை செய்ய முயன்ற **பிசாசு படுதோல்வியடைந்தது. கர்த்தர் வெற்றி சிறந்தார்.** கர்த்தருக்கே துதி,கனம்,மகிமை,மகத்துவம் உண்டாவதாக.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# ABU DHABI(UAE) CSI MALAYALA CONGRIGATION

அரேபியா தேசத்தில் **அபுதாபி** என்ற நாட்டில் நடந்த மலையாள CSI சபை மார்தோமா சபையில் உள்ள அனைத்து மலையாளிகளும் கலந்துக்கொண்ட இக்கூட்டங்கள் மிகவும் சிறப்பாகவும் ஆசீர்வாதமாகவும் நடந்தேறியது.

வெளிநாட்டு கன்வென்ஷனுக்கு அபுதாபி சபைக்கு நாட்கள் கொடுத்ததுபோல வேறு எந்த நாட்டுக்கும் இரண்டு வாரம் தொடர்ந்து பிரசங்கிக்க தேதி கொடுத்ததில்லை.

இவர்களிடம் வசனம் கேட்கும் ஆவல் அதிகமாக இருப்பதை அறிந்து தேதிகளை கொடுத்தேன். 1974லிலிருந்து நான்கு முறை இந்த தேசத்துக்கு வந்துள்ளேன். இந்த சபையினர் ஒவ்வொரு நாளும் கூட்டங்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

**அதுவும் காலை ஒரு கூட்டம் மாலை ஒரு கூட்டம் என்று என்னை பிழிந்து எடுத்துவிட்டனர்.**

ஆனால் இவர்களின் வசனம் அறியும் ஆவலை நேரில் கண்டதால் ஒரு நாளில் பல கூட்டங்களில் பேசியும் எனக்கு களைப்பு ஏற்படவில்லை. எனக்கு உற்சாகம்தான் உண்டானது. ஒவ்வொரு நாளும் கூட்டத்தில் ஏராளமான கேள்விகள் கேட்கப்பட்டது. எல்லாவற்றுக்கும் தெளிவான வசன ஆதாரத்துடன் பதில் அளித்தேன்.

இந்த நாட்டுக்கு 1974ம் வருஷம் மார்தோமா சபையினர் என்னை அழைத்து கூட்டங்கள் நடத்தினார்கள். அப்போது இங்கு CSI சபை உருவாகவில்லை.

**1979ம் வருடம்தான் இங்கு CSI சபை உருவானது.**

இவ்வருடம் 2015 அக்டோபர் **Rev.Paul Mathew** அவர்கள் என் கூட்டத்தை மிகவும் ஜெபித்து ஏற்பாடு செய்திருந்தார்.

இங்குள்ள வாலிபர்கள் கூடி ஜெபிப்பவர்களாக கண்டேன். பாடல் குழுவினர் மிகவும் அற்புதமாக **இசைக்கருவிகளை வாசிக்க பல குரல் வித்தியாசங்களுடன்** பாடியது மெய் மறக்க செய்தது.

**இந்த படம் அபுதாபி நாட்டில் கேள்வி-பதில் நேர கூட்டம்:**





## வரவேற்பு:

அபுதாபி நாட்டு சபை ஆயரும், சபை பொருப்பாளர் அனைவரும் விமான நிலையத்துக்கு வந்து பூங்கொத்து கொடுத்து விமான நிலையத்திலேயே ஜெபித்து என்னை வரவேற்றதும், கூட்ட நாட்களில் **சபை மக்கள்** போட்டிபோட்டுக்கொண்டு என்னை ஒவ்வொரு வீட்டிலும் ஆகாரம் கொடுத்து உபசரித்ததும் உபசரித்த வீடுகளில் ஆவிக்குரிய கேள்விகளை கேட்டதும் எனக்கு உற்சாகத்தை கொடுத்தது.









இங்குள்ள பலர் கேராளவில் 40 வருடங்களுக்குமுன் அவர்களுக்காக நான் ஜெபித்து அவர்கள் சுகம் பெற்றதையும், அன்று அவர்கள் சிறுவர்-சிறுமிகளாக இருந்ததையும் கூறி ஞாபகப்படுத்தி சாட்சிகள் பகிர்ந்துக்கொண்டது தேவ நாமம் மகிமைக்கு ஏற்றதாக இருந்தது.

இவ்வாறாக அபுதாபி CSI கன்வென்ஷனில் கூட்டங்களில் ஆசீர்வாதமாக நடந்தேறியது. கர்த்தருக்கே மகிமை உண்டவாதாக. ஆமென்.

# AL ALIN நாட்டு கூட்டங்கள்:

**அபுதாபியிலிருந்து** சுமார் 3 மணி நேர பயணத்தில் **அலைன்** என்ற நகரத்தை அடையலாம். 1978ம் வருடம் அபுதாபியில் உள்ள மார்தோமா சபையில் கன்வென்ஷனுக்கு வந்தபோது இந்த **அலைன்** என்ற நகரத்தில் உள்ள என் வாசகர்களின் குடும்பம் இரண்டு பேர் இருந்தார்கள். ஒரு குடும்பம் கத்தோலிக்கர்கள் மற்றவர் **மார்தோமா** சபைக்காரர்.

இவர்கள் ஏற்கனவே எனக்கு கடிதம் எழுதியிருந்தார்கள். நீங்கள் அபுதாபி வரும்போது எங்கள் ஊருக்கும் வரவேண்டும் இங்கு நிறைய மலையாளிகள் பல்வேறு சபைகளில் உள்ளவர்கள் பல்வேறு இடங்களில் வாழ்கிறார்கள்.

இவர்களுக்கு இங்கு ஆராதனை ஏதும் இல்லை. நீங்கள் வந்தால் இவர்கள் யாவரையும் ஒன்று கூட்டி என் பெரிய வீட்டில் (வில்லா) கூட்டம் நடத்தலாம் என்றனர். ஆயரிடம் கூறி அதன்படியே **அலைன்** சென்றோம்.

நல்ல ஆராதனை நடத்தினோம். அவர்கள் இந்த ஆராதனை தொடரவேண்டும் என்று கேட்டுக்கொண்டதால் **மார்தோமா சபை ஆயர்** மாதம் இருமுறை சென்று அங்கு சபையை பலப்படுத்தினார்.

இப்போது மார்தோமா சபைக்கு ஒரு ஆலயம், சி.எஸ்.ஐ, கத்தோலிக்கர்களுக்கு தனி ஆலயம் கட்டப்பட்டு மிக நன்றாக ஆராதிப்பதைக் கண்டு அந்த பாலைவனத்தில் முதல் சபை உருவாக கர்த்தர் என்னை பயன்படுத்தினரே என்று தேவனைத்துதித்தேன்.

இந்த முறை **அலைன்** நகருக்கு சென்று கூட்டம் நடத்தி 1978ம் வருடம் அந்த இடத்தில் ஆரம்ப ஆராதனை நடந்த நாட்களை நினைவு கூர்ந்து தேவனைத்துதித்தேன். இங்கு நடந்த கூட்டங்கள் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது.





# U.K. இங்கிலாந்து லண்டன் நாட்டு கூட்டங்கள்:


Bishop.Kumar Reginold அவர்கள் தன் ஊழியத்தின் 25 ஆண்டுகள் பூர்த்தியான ஆண்டுவிழா சிறப்பு கூட்டங்களுக்கு வரும்படி அழைப்பு விடுத்திருந்தார். ஆனால் அந்த நாட்களை ஏற்கனவே வேறு ஊழியங்களுக்கு கொடுத்துவிட்டபடியால் இங்கிலாந்துக்கு செல்ல இயலவில்லை. அவர் வெளியிட்ட ஆண்டுவிழா சிறப்பிதழிலில் வாழ்த்துரை எழுதகேட்டுக்கொண்டார். ஆனால் அதை கூட குறிப்பிட்ட மாதத்துக்குள் எழுதின அனுப்ப என்னால் இயலாமல் போனது. ஆகவே என் வெளிநாட்டு ஊழியங்கள் முடித்து இந்தியா திரும்புகிற வழியில் இரண்டு நாட்களை அவர்களுக்கென்றே ஒதுக்கி அந்த ஆரம்ப கால நட்புக்காகவும், அவர் என்மேல் வைத்த அன்புக்காக இங்கிலாந்து தேசம் சென்று அவர் ஆலயத்தில் கூட்டங்களை நடத்தி நேரிலேயே அவர்களை வாழ்த்தி வந்தேன். அவர்கள் இலங்கை பிரச்சனைகள் உண்டாகு வதற்கு முன்பே இங்கிலாந்து தேசத்துக்கு வந்தவர். இங்கிலாந்து தேசத்தில் முதல் தமிழ் சபையை ஆரம்பித்தவர் என்ற பெருமை இவருக்கு உண்டு.



**பிஷப்.ரெஜினால்ட்** அவர்களுடன் பல வருடங்களுக்குமுன் ஆரம்ப காலத்தில் எடுத்துக்கொண்ட படம்

இங்கிலாந்து தேசத்தில் Coventry,Willesden, Luton, Middle sex,Chelmsford, Milton Keynes, Northampton, Great Clanton ஆகிய நகரங்களில் கிளை சபைகளை ஆரம்பித்தபடியால் அனைவரும் சேர்ந்து இவருக்கு **பிஷப்(கண்காணி)** என்ற பொருப்பை கொடுத்து பெருமைப்படுத்தினார்கள். என்றாலும் இவரின் இயற்கை சுபாவம் எல்லா ஊழியர்களையும் நேசிப்பது யாரையும் வெறுக்கமாட்டார். அதனால் பல தவறான உபதேசம் கொண்ட ஊழியர்களை ஏற்று உபயோகித்ததினால் வசன அடிப்படை அல்லாத கலப்பு உபதேசங்களுக்குள் சபை மக்கள் செல்ல ஆரம்பித்துவிட்டனர். இவர் சபைக்குள்ளும் கரிஸ்மேட்டிக் என்ற பரவச உபதேசங்கள் நுழைந்துவிட்டது.





என்றாலும் நான் பாஸ்டர் குடும்பத்தையும் அவர் சபை மக்களையும் நேசித்தபடியால் சரியான உபதேசத்தை மறைக்காமல் அவர்களுக்கு கூறி வந்தேன். என் மரணத்துக்குமுன் எப்படியாவது அவர்களுக்கு சரியான உபதேசத்தை கூறவேண்டும் என்ற என் பாரத்தை கர்த்தர் நிறைவேற்றி வைத்தார்.

கர்த்தர்தாமே **பிஷப்.ரெஜினால்ட்** தம்பதியினரையும், அவர்கள் சபைகளையும் ஆசீர்வதிப்பாராக என்று வாழ்த்துகிறேன்.

## லண்டன் விசுவாசிகளின் ஜெபக்கூடுகை:






அதே லண்டன் நகரில் ஒரு சில விசுவாசிகள் தங்களுக்கு கரிஸ்மேட்டிக் சபைகளில் அங்கத்துவம் இருந்தாலும் சகோ.**Dr.DONNY** அவர்களுடன் சிலர் இணைந்து வாரம் ஒருமுறை வேத வசன தியானிப்பும், ஜெப ஐக்கியமும் ஒரு ஆலயத்தை வாடகைக்கு எடுத்து கூடுகை நடத்தி வருகிறார்கள். அந்த ஐக்கியத்தில் விசுவாசிகளுக்கான செய்தியை கூறி வந்தேன். இப்படியும் சில விசுவாசிகள் நடத்தும் வேத வசன தியானிப்பும், ஜெப ஐக்கியமும் அநேகரை சரியான வசனத்தில் நிலைத்து நின்று கர்த்தரின் வருகைக்கு தங்களை ஆயத்தப்படுத்தி கொள்கிறார்கள். இப்படிப்பட்ட ஆவிக்குரிய ஜெப ஐக்கியங்களை ஒவ்வொரு நாட்டிலும் கர்த்தர் பெருக செய்வாராக. ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# என் வெளிநாடுகளின் ஊழியத்தில் என் மனதுக்கு கிடைத்த பெருமை:

ஒவ்வொரு நாடுகளிலும் எனக்காக என் ஊழியத்துக்காக **யாரும் பணம் சேகரித்து** அல்லது **காணிக்கை சேகரித்து** எனக்கு **கொடுக்க வேண்டாம்** என்று பகிரங்கமாக கேட்டுக் கொள்ள வைத்த தேவனுக்கு ஸ்தோத்திரமும், கூட்டத்தின் முதல்நாளே எனக்கு யாரும் **பரிசுகள், உடைகள்,**வாட்சுகள் போன்ற எந்த பரிசும் தயவுசெய்து எனக்கு கொடுக்கவேண்டாம் என்று **பகிரங்கமாக** அறிவிக்கும் பழக்கம் என் முதல் வெளிநாட்டு பயணம் தொடங்கிய 1970 முதலே கூற தொடங்கினேன்.

அதற்கு முதல் காரணம், வெளிநாட்டு பொருள் மோகம் என் பிள்ளைகளுக்கோ எனக்கோ உண்டாகாதபடி கர்த்தர் என்னையும்,என் குடும்பத்தையும் ஆரம்ப காலத்திலேயே பக்குவப்படுத்தி யிருந்தார். அதற்கு ஏற்றப்படி என் குடும்பத்தினரும், என் இரண்டு பிள்ளைகளும் வெளிநாட்டிலிருந்து எங்களுக்கு என்ன வாங்கி வந்தீர்கள்? என்று கேட்காதபடி அவர்களுக்கு தேவையான காரணம் கூறி அவர்களுக்கு ஆலோசனைக்கூறி அவர்களை நான் ஆயத்தப்படுத்தியிருந்தேன்.

என் மனைவியும், நீங்கள் போய் ஊழியத்தை வெற்றிகரமாக முடித்து பத்திரமாக **திரும்பி வந்தால் அதுவே எங்களுக்கு போதும்.** நாங்களும் எந்த பொருளையும் எதிர்ப்பார்க்கமாட்டோம் என்று கூறி என்னை வழி அனுப்புவதால் நல்ல ஆவிக்குரிய மனைவியை கர்த்தர் எனக்கு தந்தாரே என்று தேவனை துதிக்க செய்தது.

# பணம் சேகரிக்க வெளிநாடு போகும் நியாமான ஊழியர்கள்:

ஆனால் **இந்தியாவிலிருந்து போகும்** மற்ற ஊழியர்கள் **பண சேகரிப்புக்காகவே** போகிறவர்களுக்கு நியாயமான பண தேவைகள் உண்டு என்றால் அவர்கள் வெளிநாட்டில் காணிக்கையாக பணம் கேட்பார்கள். அதை குற்றம் சொல்ல இயலாதே? அவர்கள் நிலை வேறே? என் அழைப்பு வேறே? ஆகவே நியாயமான நோக்கத்துடன் பணம் சேகரிக்க வெளிநாடு செல்லும் ஊழியர்களை நாம் குறை சொல்லவேமுடியாது.

# டிரைபல் மிஷன் தேவைகள்:

நாங்கள் சிலராக தொடங்கிய ஸ்தாபனம்தான் **டிரைபல் மிஷன்** ஆகும். அதை சார்ந்த **டிரைபல் மிஷன் ஆஸ்பத்திரியும்,டிரைபல் மிஷன்** பள்ளிக்கூடமுமாகும். நான் டிரைபல் மிஷன் ஆரம்பித்த ஸ்தாபகர் என்றாலும், அதை **நிர்வாகிக்கும்** பொறுப்பு முழுவதும் **டாக்டர்.முரளிதர்.** M.D., அவர்களும் அந்த ஸ்தாபன போர்டு மெம்பர்களுக்கும் உரியதாகும்.

இதன் தேவைகள் மிக அதிகம். பல சமயங்களில் டிரைபல் மிஷன் ஆஸ்பத்திரியில் பணி செய்யும் 9 டாக்டர்களுக்கும், நர்ஸ்களுக்கும்,பணியாளர்களுக்கும், மேலும் பள்ளிக்கூட ஆசிரியைகளுக்கும் சம்பளம் கொடுக்கமுடியாத நிலை பலமுறை வந்ததுண்டு. அதோடு **ஆதிவாசிகளின் பிள்ளைகளுக்காக** ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளில் **ஆதிவாசி பிள்ளைகள்** இப்போது அதிக அளவில் சேர ஆரம்பித்துவிட்டனர். அந்த பிள்ளைகளுக்கு கல்வி மிக அவசியம். அதோடு அவர்களக்கு இயேசுவை விதைக்கமுடியும். அவர்கள் தங்குவதற்கு கட்டிட

தேவைகள் அதிகம் உண்டு. இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலைகளில் டாக்டர்.முரளிதர் அவர்கள்தான் பல நாடுகளுக்கு சென்று அலைந்து பணம் சேகரித்து வருவார். அவர் டிரைபல் மிஷன் ஸ்தாபனத்துக்காக படும் பிரயாசங்கள் விவரிக்கமுடியாத மிக அதிக கஷ்டமானதாகும்.

இப்படிப்பட்ட உண்மையான தேவைகள் உள்ள ஸ்தாபனங்கள் வெளிநாட்டில் வாழும் இந்தியர்களிடம் பணம் சேகரிக்க செல்ல வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும். ஆகவே பண தேவைக்காக தேவையுள்ள ஸ்தாபனங்கள், பணத்துக்காக வெளிநாடுகளுக்கு செல்வதில் தவறில்லை என்பது என் அபிப்ராயம் ஆகும். இப்படிப்பட்ட பண சேகரிப்புகளை நான் குறை சொல்லவில்லை.

என்னை பொருத்தவரை என் 51 வருட ஊழியத்தில் இதுவரை நான் என் தனிப்பட்ட ஊழியத்தில் பணம் சேகரிக்க வெளிநாடுகளுக்கு சென்றதில்லை. இதன் அவசியமும் எனக்கு ஏற்பட்டதில்லை என்பதையும் அதன் காரணத்தையும் கீழே நீங்கள் வாசிக்கலாம்.

## காணிக்கை வேண்டாம் என்று நான் கூறக்காரணம்:

எனக்கு என் ஊரில் எனக்கு **சொந்தமாக ஸ்தாபனம்** கிடையாது, சொந்தமாக **சபை** ஏதும் கிடையாது. **அனாதை விடுதியோ** மற்ற **சமூக தொண்டு** ஸ்தாபனங்கள் எதுவும் நான் இந்தியாவில் எங்கும் நடத்தவில்லை.

ஆகவே எந்த **வெளிநாட்டு பணமும்** எனக்கு தேவையாயிருக்கவில்லை. என் வீட்டுவேலை செய்வோரை தவிர சம்பளம் கொடுக்கும்அளவு அல்லது என்னிடம் சம்பளம் வாங்கும் யாரும் எனக்கு இல்லை.

' என் வெளிநாட்டு பயணத்துக்கு என் **பயண டிக்கட்** செலவுகளை **என்னை அழைக்கும் சபைகளே** அதன் பொறுப்புகளை பொருப்பெடுக்கிறார்கள். அதற்குமேலும் பல நாடுகளுக்கான **விசாக்களை** இந்தியாவில் உள்ள **பல நாட்டு தூதர்** அலுவலகங்களில் நான் சென்று பெற ஆகும் **செலவுகளைகூட** அவர்களே எனக்கு அனுப்பிவிடுவார்கள். அப்படியிருக்க **வெளிநாட்டு காணிக்கை எனக்காக திரட்டும் அவசியம்** எனக்கில்லை. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

## எனக்கும் பணதேவை உண்டு:

ஒரே ஒரு விஷயத்துக்கு மட்டும் எனக்கு பண தேவை உண்டு. அதாவது நான் நடத்தும் பத்திரிக்கையான ஜாமக்காரன் **தமிழ்** மற்றும் **மலையாளம்** பத்திரிக்கையின் எண்ணிக்கை ஒவ்வொரு வாரமும் கூடிக்கொண்டே போகிறது.

புது விலாசபட்டியல் தயாரித்தபோதும் பத்திரிக்கையின் எண்ணிக்கையை பாதிக்கு பாதி நாங்களே குறைத்தபோதும் ஜாமக்காரன் பத்திரிக்கையைப்பற்றி மக்கள் கேள்விபடகேள்விபட ஜாமக்காரன் பத்திரிக்கையின் எண்ணிக்கை முன்பைவிட அதிகம் பெருக ஆரம்பித்தது. அப்படி பெருகுவதற்கு அந்த மக்கள் காட்டும் ஆர்வம்தான் காரணமாகும்.

தினசரி பத்திரிக்கை கேட்டுவரும் எங்களுக்கு வரும் கடிதங்களின் எண்ணிக்கையை வைத்து, மக்களின் ஆர்வத்தை யூகிக்க முடிகிறது. அதே போல் கம்பியூட்டர் வழியாக வெப்சைட்டில் ஜாமக்காரனை வாசித்து பார்க்க: **www.jamakaran@com** மூலமும்,PDF மூலமும் ஒவ்வொருவரின் இ-மெயில் முகவரிக்கு அனுப்பும் ஜாமக்காரன் எண்ணிக்கையும் பல லட்சங்கள் கூடி போய்விட்டது என்பதையும் அறிந்து தேவனைத் துதிக்கிறேன்.

மற்ற **மூவரணி,நால்வர்** அணி ஊழியர்களால் குற்றம் சுமத்தும் ஆவியை பெற்றவன் என்றும், பரிசுத்தாவியை மறுதலிக்கிறவன் என்றும் இவர்கள் யாவரும் எவ்வளவுதான் பொய்யாய் விளம்பரப்படுத்தினாலும் பெரும்பாலான சபை மக்கள்,**ஆயர்கள்,பிஷப்மார்கள்**,என்னை வெறுக்கும் பெந்தேகோஸ்தே **பாஸ்டர்கள்கூட** இப்போது என்னை மிகவும் நன்றாக புரிந்துக்கொண்டார்கள் என்பதை அறியும்போது நான் எழுதியது, நான் மேலே குறிப்பிட்ட இரண்டுவித ஊழியக்கார அணிகளால் நான் அவமானப்படுத்தப்பட்டும், கிறிஸ்தவ மக்கள் என்மேல் இப்போது காட்டும் அன்பும், ஆதரவும் மிகவும் வித்தியாசமானது. அதை நினைத்து தேவனை துதிக்கிறேன்.

## பணத்தேவை:

ஜாமக்காரனை தமிழ்,மலையாளத்தில் மாதாமாதம் அச்சிட்டு இந்தியாவிலும் வெளிநாடுகளுக்கும் ஜாமக்ாரனை வெளியிடுவதின் தேவைகளையும்கூட இந்தியாவில் பல வித சபைகளில் உள்ள வாசகர்களை நான் அவர்களிடம் கேளாமலே **மாதாமாதம்** எனக்கு பணம் அனுப்பி என்னை தாங்குகிறார்கள். வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களும் பணம் அனுப்பி தாங்குகிறார்கள்.

**என் பாக்கெட்டிலிருந்து சொந்த பணம் ஜாமக்காரன் பத்திரிக்கைக்காக எதுவும் செலவு செய்ய வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டதில்லை!.**

மற்றவர்கள் எனக்கு அனுப்பும் பணம் மிகவும் போதுமானதாகவும் அதன் தேவைகளை சந்திக்க மிகவும் சரியான அளவில் இதுநாள் வரை எனக்கு பணம் கிடைத்துக்கொண்டுதான் இருக்கிறது.

அதனால் எனக்கு எங்கும் எதிலும் **கடன் இல்லாமல்** நிம்மதியாக ஊழியம் செய்கிறேன்.

## நானும் இம்முறை வெளிநாட்டில் பணம் வாங்கினேன்:

வெளிநாட்டு ஊழியங்களில் எனக்கு காணிக்கை வேண்டாம் என்று நான் கூறியும் எனக்கு காணிக்கை கொடுத்த இரண்டு சபைகளும், பணம் கொடுத்த விசுவாசிகளும் உண்டு. அதை நான் தவிர்க்க முடியவில்லை.

இப்படியாக என் வெளிநாட்டு ஊழியம் மிகச் சிறப்பாக ஆசீர்வாதமாகவும் அமைந்தது என்று கூற எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. தேவனுக்கு மகிமை உண்டாதவதாக.ஆமென்.

## இந்தியாவில் மற்ற ஊழியங்களுக்கு அனுப்பிவிட்டேன்.

வெளிநாட்டிலிருந்து இந்தியா வந்ததும் அங்கு கிடைத்த **பணங்களை ஒன்று சேர்த்து** என்னுடைய ஊழிய தேவைகள்போக, மீதி பணத்தையொல்லாம் இந்தியாவில் உள்ள மற்ற ஊழியங்களுக்கு அனுப்பிவிட்டேன்.

2015 நவம்பர் 11ம் தேதி **ஒரு லட்சம் ரூபாய்களை** அப்படியே **டிரைபல் மிஷன்** பெயரில் நானே எழுதி **டாக்டர்.முரளிதர்** அவர்களுக்கு பதிவு தபால் மூலம் அனுப்பிவிட்டேன்.

பணம் கொடுத்தவர்களும், வாசகர்களும் போன் நெம்பர்: 0422-2657023க்கு போன் செய்து **டாக்டர்.முரளிதர்** அவர்களிடம் விசாரித்து உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

www.jamakaran.com

# டாக்டர்.முரளிதர்,MD அவர்களின் அறிவிப்பு:

## டிரைபல் மிஷன் ஊழியங்களுக்கு:



For Bethany Bala Bhavan, we need

= More Sponsors for our hostel tribal children
= A new dormitory to accommodate 25 more children
= Modern toilet facilities in tribal school and tribal hostel
= A well equipped kitchen
= A good Auditorium for tribal school children
= Equipments for recreation facilities and Games.

**நன்கொடை காணிக்கை அனுப்புகிறவர்களின் கவனத்திற்கு**

ட்ரைபல் மிஷன் ஊழியங்களுக்காக உதவிச்செய்கிறவர்கள் மணியாடர் செக், டிராஃப்ட் முதலானவைகளை அனுப்பி வைக்கலாம்.

கீழே குறிப்பிடப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் மூலம் அனுப்பலாம்

**AXIS BANK LTD, PERUMBAVOOR**
SB A/C No. 91001028193291, IFSC: UTIB 0000803

**STATE BANK OF TRAVANCOR, PERUMBAVOOR**
SB A/C No. 57041605654, IFSC: SBTR 0000154

**THE CATHOLIC SYRIAN BANK LTD., PERUMBAVOOR**
SB A/C No. 0156 -00705880 - 190001, IFSC: CSBK 0000156

**வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கு மணியாடர் செக், மணி ட்ரான்ஸ்பர் மூலமாக மட்டும் கொடுக்கப்பட வேண்டும். தயவு செய்து உங்கள் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்**

**INDIAN OVERSEAS BANK , PERUMBAVOOR**
SB A/C No. 006901000008239, IFSC: IOB-A- 0000069

என்று வங்கி கணக்கு மூலமாக அனுப்பலாம்

**ஊழியங்களுக்கு அனுப்பத்தடையுள்ளவர்கள் கீழ்க்காணும் வங்கிக்கு அனுப்பலாம்**

**Dr.K. MURALIDAR, THE CATHOLIC SYRIAN BANK LTD., PERUMBAVOOR**
SB A/C No. 0156 -00706354- 190001, IFSC: CSBK 0000156

நன்கொடை, காணிக்கை வங்கி மூலம் அனுப்புகிறவர்கள் தயவு செய்து முழு விலாசம் விபரங்களும் அலுவலகத்துக்குத் தெரியப்படுத்த உங்களைக் கேட்டுக்கொள்கிறோம். (தொலைபேசி, இமெயில், கடிதம்) இல்லையானால் அனுப்பும் பணத்திற்கு 30 சதவீதம் டாக்ஸ்

**எங்கள் முகவரி**

**TRIBAL MISSION,**
IRINGOLE P.O PERUMBAVOOR -683 545
ERNAKULAM (Dist)., KERALA, INDIA, Tel - No. 0484 - 2593866
E-mail: tribalmission@hotmail.com

# முக்கிய அறிவிப்பு:

## CSI சபை ஆயர்கள்,DC கமிட்டி உறுப்பினர்கள் கவனத்திற்கு:

## பதவி வெறிக்கொண்ட CSI பழைய-புதிய மாடரேட்டர்களும், CSI திருமண்டலத்திலுள்ள பதவி வெறிக்கொண்ட வேறு சில பிஷப்மார்களினால் அழிவை நோக்கி போகும் CSI சபைகள்:

நமது CSI சபைகளில் மொத்தம் 24 திருமண்டலங்களில் உள்ள ஆயர்கள், பிஷப்மார்களின் ஓய்வுபெறும் ஆண்டை 65லிருந்து மேலும் 2 வருடங்கள் சேர்த்து ஓய்வுபெறும் வயதை 67ஆக உயர்த்த சட்டதிருத்தம் (AMENDMENT) கொண்டுவர அவசர ஏற்பாடுகள் **தவறான நோக்கத்துடன்** நிறைவேற்றப்போகிறது. CSI சினாட் மூலமாக **மாடரேட்டர்,டெப்டி மாடரேட்டர்** மற்றும் CSI சினாட் பொருப்பாளர்கள் மூலமாக இந்த சட்டதிருத்தம் அறிவிக்கப்பட்டு அவசர அவசரமாக அனைத்து திருமண்டல கமிட்டி மூலமாக சட்ட திருத்தம் நிறைவேற ஒப்புதல் பெரும் ஏற்பாடு நடைப்பெற்றுக்கொண்டிருக்கின்றன. 2015 அக்டோபர் மாதம்வரை 14 திருமண்டல ஒப்புதலை அவசர கோலமாக இரகசிய ஓட்டெடுப்பு நடத்தாமல், பல கூச்சலின் நடுவே கைகலப்பு சண்டைகளும் நடக்க அங்கத்தினர்களின் கைகளை துாக்க வைத்து **சட்டதிருத்த ஒப்புதல்** பெறப்பட்டதாக அறிவிக்கப்பட்டுவிட்டது.

2015 நவம்பர் மாதம் **திருநெல்வேலி CSI திருமண்டலத்தில்** நடந்த கமிட்டி கூட்டம் சுற்றிலும் போலீஸ் பாதுகாப்புக்கு நிற்க, DCமெம்பர்கள்,ஆயர்களை பரிசோதனை செய்து எலக்ஷன் நடைபெறும் மண்டபத்துக்குள்ளே அனுமதித்தனர். அப்போது காரசாரமான விவாதம் நடைபெற்றது. பிஷப் சட்டதிருத்த மசோதவை வாசிக்க தொடங்கியவுடன் அங்கத்தினர்களிடையே கைகலப்பு ஏற்பட நாற்காலிகள் வீசி எறியப்பட்டது. உடனே அவசர அவசரமாக தீர்மான மசோதவை பிஷப்.**Rt.Rev. J.J.Christudass** அவர்கள் வாசிக்க தொடங்கினபோது உடனே சிலர் மேடையேறி பிஷப்பின் மைக்கை பிடுங்கி எறிந்தார்களாம். **உடனே பிஷப் அவர்கள் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக** அறிவிக்கிறேன் என்று கூறி



நெல்லை சி.எஸ்.ஐ., டயோசீசன் பெருமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் சிலர் மூலச்சட்டத்திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து திரண்டு நின்றதால் பரபரப்பு ஏற்பட்டது.

பாதுகாப்புடன் காரில் ஏறி போய்விட்டார். இப்படித்தான் பல திருமண்டல தீர்மானங்கள் அங்கத்தினர்களின் சத்தத்துக்கும் கைகலப்புக்கும் இடையே தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக சட்டத்துக்கு புறம்பான முறையில் அறிவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இன்னும் 3 திருமண்டலங்கள் ஒப்புதல் அனுப்பிவிட்டால் **சட்டதிருத்தம்** நிறைவேற்றப்பட்டுவிடும்.

இதில் புதிதாக தோன்றிய இரண்டு திருமண்டலங்கள் கேரளாவிலுள்ள **கொச்சி, கொட்டாராக்கரா** திருமண்டலத்துக்கு புதிய பிஷப் நியமிக்கப்படாததால் மாடரேட்டரே அங்கு கம்மிசரியாக செயல்பட்டு அங்குள்ள **ஆயர்களை** கட்டாயப்படுத்தியும், பயமுறுத்தியும் DC மெம்பர்களை கொண்டும் சட்டதிருத்தத்தை நிறைவேற்ற முயற்சிப்பதாக செய்திகள் வந்துக் கொண்டிருக்கின்றன. அதே சமயம் பல திருமண்டலங்களில் **கோர்ட்** மூலம் தடை உத்தரவு பிறக்கப்பட்டுள்ளது. ஆந்திராவில் ஹைதரபாத்தில் உயர்நீதிமன்றமும், கோயமுத்தூர் நீதிமன்றம்,. கேரளாவில் கொல்லம் நீதிமன்றம் கமிட்டி நடத்தக்கூடாது என்று தடை உத்தரவு பிறப்பித்துள்ளதாக செய்திகள் கூறுகிறது.

இதில் பிரச்சனை என்னவென்றால் **ஆயர்கள்** வயதை கூட்டினால் **பிஷப்மார்களின்** வயதும் தானாக கூடிவிடும். மேலும் இரண்டு வருடங்கள் **பிஷப்,மாடரேட்டர்கள்** தங்கள் பதவியை அனுபவிக்கலாம். ஆனால் இந்த ஓய்வு வயதை **என்ன நோக்கத்துக்காக கூட்டுகிறார்கள்** என்பதற்கு இவர்கள் காரணம் கூறவில்லை. ஆயர்களின் ஓய்வு வயதை கூட்டுவதால் நமக்கு பிரச்சனையில்லை. ஆனால் பிஷப்மார்கள் ஓய்வுபெறும் வயது மேலும் இரண்டு வருடங்கள் கூட்டினால் பல பிரச்சனைகள் உருவாக நேரும். **தெய்வ பயம்** உள்ள **பண ஊழல் இல்லாத பிஷப்மார்கள்** அல்லது **மாடரேட்டர்கள்** பதவிக்கு வந்தால் திருமண்டலத்துக்கு நல்லதே நடக்கும்! ஆனால் இன்றைய பல **பிஷப்மார்களின் நிலை** மற்றும் **மாடரேட்டர்களின் நிலை** அப்படி அல்லவே? நாம் பத்திரிக்கைகளில் வாசிப்பதைப்போல பல திருமண்டலங்களில் **பண ஊழல்கள்** கரைபுரண்டு ஓடுகிறதை கேள்விப்படுகிறோமே! திருமண்டலங்களில் பல அநியாயங்கள் வேலை நியமனங்களில் நடைபெறுவதை கேள்விப்படுகிறோமே!. பல ஆயர்கள் பழிவாங்கப்படுகிறார்கள்.

ஒவ்வொரு திருமண்டலங்களிலும் **பிஷப்மார்களின்** மேலுள்ள **நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கை ஏராளம்.** பல நீதிமன்றங்களில் CSI பிஷப்மார்களை நீதிபதிகள் வெளிப்படையாக கண்டித்தது எவ்வளவு பெரிய அவமானம்!. இப்படிப்பட்டவர்கள் தங்கள் **பிஷப் நியமனத்தை** ஊழியமாக நினைக்காமல் **பதவியாக** நினைப்பதால்தான் இத்தனை போட்டிகள்.

**பிஷப்** பேனலில் வந்தவர்களை **பிஷப்பாக** நியமிக்க மாடரேட்டர்கள் பெற்ற **கோடிகளின் பணதொகை** மிகப்பெரியது ஆகும். பல இடங்களில் ஒவ்வொரு பிஷப்மார்களின் பின்னே பெரும் பண முதலைகள் எண்ணிக்கை மிக அதிகம். ஆகவே தயவுசெய்து ஆயர்களும், DC டயோசிஸ் கவுன்சில் மெம்பர்களும் இந்த சட்ட திருத்தத்துக்கு (AMENDMENTS) கமிட்டி எலக்ஷனில் **அங்கீகாரம் கொடுக்காதபடி** நம் CSI சபைகளின் நன்மைக்கு வேண்டி உதவுங்கள்.

சட்டத்திருத்தம் நிறைவேற்றபட்டால் **பார்வோன்** கையில் அகப்பட்ட **இஸ்ரவேலர்களைப்போல** தென்னிந்திய திருச்சபை பிஷப்மார்களின் மூலம் பல இன்னல்களை அனுபவிக்க நேரும்.

ஜாமக்காரனின் பணியாக உங்களுக்கு இந்த Website மூலமாக அறிவிக்க வேண்டியதை அறிவித்துவிட்டேன். இந்த செய்தி ஜாமக்காரன் பத்திரிக்கையில் தாமதமாக வெளிவரும். ஆகவே Website மூலமாக **அவசர அறிவிப்பாக தமிழிலும்-மலையாளத்திலும்** இதை வெளியிட்டுவிட்டேன்.

நான் அக்டோபர் 2015ல் வெளிநாடு சென்றதால் நவம்பர் (2015) ஜாமக்காரன் பத்திரிக்கை தாமதமாகவே வெளிவரும். அதற்குள் சட்டதிருத்தம் நிறைவேற்றக்கூடாது என்பதுதான் என் ஜெபம்.

நான் இப்படி பிஷப்மார்களைபற்றி எழுதியதின் பின்விளைவுகளாக பல **CSI பிஷப்மார்கள் என்னை வெறுப்பார்கள்** என்பதை நான் அறிவேன்.

# மேலும் நீங்கள் அறியவேண்டியது:

இப்படிப்பட்ட சட்டத்திருத்தம் CSI சபை மக்கள் இதை ஏற்கிறார்களா இல்லையா என்று பரிசோதிக்க நாடிபிடித்து பார்க்கும் மாயவேலையாக இதை நான் கருதுகிறேன்.

35 ஆண்டுகளுக்குமுன் **பால் கமிஷன்** என்று ஒய்வுபெற்ற நீதிபதிகள், ஒய்வுபெற்ற பிஷப்மார்கள், ஆயர்கள்,லெய்ட்டிகள் ஆகியவர்களை ஒன்றிணைத்து பால் என்பவரின் தலைமையில் CSI சட்டத்திட்டங்களை சரிப்படுத்த, திருத்தி அமைக்க CSI சினாட் ஏற்பாடு செய்தது.

அதன் அடிப்படையில் ஒவ்வொரு திருமண்டலமாக இவர்கள் நேரில் சென்று பிஷப்மார்களோடும், ஆயர்களோடும்,சபை மக்களோடும் கலந்து ஆலோசித்து பலருடைய அபிப்ராயங்களை குறிப்பெடுத்து புதிய சட்டமாற்றங்களை வடிவமைத்து கமிஷனை சினாட் வசம் சமர்பித்தனர்.

அந்த சட்ட திருத்தங்களை வாசித்த அன்று பதவியில் இருந்த பல பிஷப்மார்களுக்கு அதில் ஒப்புதல் இல்லாததால் கமிஷன் ரிப்போர்ட்டை அகல பாதாளத்தில் கிடப்பில் போட்டுவிட்டனர். அதற்காக சினாட் செலவழித்த பல கோடி ரூபாய்களும் பயனற்றுபோயின.

1). பால்கமிஷனில் குறிப்பிட்ட முக்கி ஷரத்து என்னவெனில் எந்த பிஷப்பும் 5 அல்லது 6 வருடத்துக்குமேல் பதவி வகிக்கக்கூடாது. பிஷப் எலக்ஷனில் நிற்க பேனலில் ஒரு ஆயர் வரவேண்டுமானல் ஒய்வுபெற 5 அல்லது 6 வயதுள்ள நிலையில் உள்ளவர் மட்டுமே பிஷப் எலக்ஷனில் நிற்க தகுதி பெருவார்.

2). எந்த ஆயரும்,பிஷப்பும் ஆலய சொத்துக்களை கையாளும் பொருப்பு வகிக்கக்கூடாது.

கல்லூரி,பள்ளிகூடங்கள்,டிரெனிங் ஸ்கூல் நிர்வாகங்களை எந்த ஆயர் வசமோ பிஷப்பினிடமோ கொடுக்கக்கூடாது.

3). ஆயர்கள்,பிஷப்மார்கள் திருச்சபை திருமண்டல ஆவிக்குரிய திருச்சபை பணிகளை மட்டுமே செய்யவேண்டும். வேலை நியமனங்களையோ,ஆசிரியைகளை இடம் மாற்றல் விஷயத்திலோ ஆயர்களோ,பிஷப்மார்களோ தலையிடக்கூடாது.

4). கல்லூரி,CSI ஸ்தாபனங்கள்,கடைகள்,கம்பளக்ஸ்கள் யாவும் திருமண்டல சபை லெயிட்டி அல்லது சபையில் குற்றம் சாட்டப்படாத நியாயமான நபர்களை தெரிந்தெடுத்து அவர்களைக்கொண்டு கமிட்டி உருவாக்கி அவர்களிடம் நிர்வாக பொருப்பை திருமண்டலம் ஒப்படைக்கவேண்டும்.

இப்படி நடந்தால் ஆயர்,பிஷப் ஆகியவர்கள் கர்த்தரின் பணியை மட்டும் செய்து சபை மக்களை ஆவிக்குரிய வழியில் நடத்தமுடியும். இன்று பல ஆயர்கள் பள்ளிக்கூட நிர்வாகத்தின் பணியையும் சேர்த்து செய்வதால் ஞாயிறு பிரசங்கம் தயார்ப்படுத்தகூட அவர்களுக்கு நேரம் இல்லாமல் போகிறது. சபை மக்களின் வீடுகளை சந்திக்க இயலாமல் போகிறது. மக்களுக்கு ஆவிக்குரிய ஆகாரம் கிடைக்காமல் போகிறது. சபையில் உள்ள விசுவாசிகள் வியாதிப்பட்டால் **பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள்** வந்து ஜெபித்து போகிறார்கள். ஆனால் ஆயர்கள் பலர் ஜெபிக்கபோவதில்லை.

5). ஒரு திருமண்டல பிஷப்மேல் குற்றசாட்டு எழுந்தால் அவரை தண்டிக்கவும், வேறு திருமண்டலத்துக்கு இடம்மாற்றம் செய்யவும் வேண்டும் என்றும் பால் கமிஷன் கூறுகிறது.

6). சபை காணிக்கை வரவு-செலவு கையிருப்பு அத்தனையும்,சபை மக்களுக்கு எழுத்து பூர்வமாக அச்சடித்து அவர்கள் கையில் கொடுக்கப்படவேண்டும். காணிக்கை விவரம் காணிக்கை போட்டவருக்கு அறிய உரிமை உண்டு.

இப்படி பல நல்ல சட்ட ஏற்பாடுகளை பால் கமிஷன் பரிந்துரைத்துள்ளது. இப்படிப்பட்ட **பால் கமிஷன்** உருவான விவரம் இப்போதுள்ள ஆயர்களுக்கு பிஷப்மார்களுக்கு புதிய சந்ததிகளுக்கு தெரியவே தெரியாது.

பழைய ரிட்டயர்ட் ஆன பிஷப்மார்கள், ஓய்வுபெற்ற சினாட் அங்கத்தினர் யாரிடமாவது இந்த கமிஷனின் காப்பிகள் கையில் இருந்தால் உடனே எனக்கு அறிவிக்கவும்.

என்னிடம் **பால் கமிஷன்** காப்பி ஒன்று இருந்தது. அதை வாசித்துவிட்டு தருகிறேன் என்று வாங்கிப்போன பிஷப் ஒருவர் என்னிடம் அதை திருப்பி தரவில்லை.

ஆனாலும் அதன் போட்டோ காப்பி என் லைப்ரரியில் நிச்சயமாக இருக்கும் இடைவெளியில்லாத என் ஊழியத்தின் காரணமாக அதை தேடி எடுக்க எனக்கு நேரம் இல்லை. எப்படியும் அதை வெளியிடுவேன் என்று நம்புகிறேன்.

மேலே வாசித்த பால் கமிஷன் பரிந்துரைப்படி ஒரு பிஷப்பின் பதவி காலம் 5 அல்லது 6 வருடமாக இருக்குமானால் ஆயர்,பிஷப் இவர்களின் ஓய்வு வருடங்கள் 70 ஆனாலும்,80 ஆனாலும் பிரச்சனையில்லை.

CSIயில் உள்ள DC மெம்பர்கள் பிஷப் பதவி காலம் 5 வருடம் மட்டுமே என்பதை உறுதிப்படுத்த ஏற்பாடு செய்தால் அதுபோதும். அப்படி செய்தால் இப்போது உண்டாக்கிய சட்டதிருத்தத்தால் நிச்சயம் ஆபத்து உண்டாகாது.

## CSIயில் நவீன உபதேசத்தின் பிரவேசம்:

' ஏற்கனவே பல வருடங்களுக்குமுன் 1992ல் CSI சினாட் கூட்டத்தில் நடந்த ஆராதனை கிரமத்தில் இப்படித்தான் நவீன உபதேசத்தை உள்ளே நுழைக்க பார்த்தார்கள். அதாவது இயேசுதான் **அல்லா,** இயேசுதான் **சிவா,** நீரே **புத்தர்** என்றெல்லாம் கூறும் லிபரல் நவீன பிசாசின் உபதேசத்தை திணிக்கப் பார்த்தார்கள்.

**நமது CSI சபைகளின் 23வது வருடாந்திர** கூட்டம் **1992ல் திருநெல்வேலி டையோசிஸ் மூலம் பாளையங்கோட்டையில்** நடத்தப்பட்டு அதில் ஆராதிக்க ஆராதனை கிரமம் (லிட்டர்ஜி) அச்சடித்து எல்லா **பிஷப்மார்** கையிலும், DC மெம்பர்கள் கையிலும் கொடுக்கப்பட்டது. அதில் எழுதப்பட்ட வார்த்தைகள்தான் கிறிஸ்தவர்களையே அதிரச் செய்தது.

அதில் எழுதப்பட்ட வார்த்தைகள் கிறிஸ்தவ ஆயர்களையும், டிசி மெம்பர்களையும், மற்றும் சபை மக்களையும் அதிர்ச்சியுற செய்தன.

அதில் எழுதப்பட்ட வார்த்தைகள் என்னவென்றால் **எல்லா தெய்வங்களும்** ஒன்று தான் என்பது போல் அந்த வார்த்தைகள் இருந்தது.

அதன் போட்டோ காப்பி அடுத்த பக்கத்தில் நீங்கள் காணலாம்.




# பிஷப்மார் செய்த ஜெபத்தின் ஆரம்பம் இதுதான்:

**(ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது):**

**எங்கள் தேவனே,**
**உம் மன உருக்கத்தை இயேசுவில் காண்கிறோம்,**
**நீரே சிவாவாயிருந்து தயையுள்ளவராயிருக்கிறீர்**
**நீரே அல்லாவாக இரக்கமுள்ளவராக இருக்கிறீர்**
**நீரே புத்தர்கள் ஆராதிக்கும் மனஉருக்கமான புத்தராக இருக்கிறீர்.**
**தாமரை பூக்களை கையில் ஏந்தி உம்மை சுற்றி வந்து உம்மை வணங்குகிறோம்.**

**இப்படி துதித்தவுடன் அனைத்து பிஷப்மாரும் ஆமென் என்றார்கள். ஆமென் என்றாலும் அப்படியே ஆகக்கடவது என்று அர்த்தமாகும்.**

மேலும் ஒரு குறிப்பிட்ட விஷயத்தை உறுதிப்படுத்த **ஆமென்** என்ற வார்த்தையை எபிரேயர்கள் உபயோகிப்பார்கள். அத்தனை பிஷப்மாரும்,மாடரேட்டரும், ஆயர்களும் இந்த நவீன உபதேசத்தை ஆதரித்து **ஆமென்** கூறிவிட்டார்கள்.

இந்த ஆராதனை முடிந்தவுடன் பல ஆயர்களும், இரண்டு பிஷப்மாரும் எனக்கு இந்த லிட்டர்ஜி ஆராதனை கிரமத்தை எனக்கு அனுப்பி CSIக்குள் இந்த உபதேசம் வராமல் இருக்க ஏதாவது செய்யுங்கள் என்று எழுதினார்கள்.

## பிரச்சனை இதோடு போகவில்லை:

மதுரை அரசரடி வேதாகம கல்லூரி பிரின்ஸ்பல்லாக இருந்த **Rt.Rev. சாமுவேல் அமிர்தம்** அவர்கள் தெற்கு கேரளா பிஷப்பாக தெரிந்தெடுக்கப்பட்டார். இவர் நல்ல சமூக சேவகராக நல்ல உதவிகளை ஏழைமக்களுக்கு செய்தார். ஆனால் அவருக்குள் இருந்த நவீன உபதேசம் இப்போது தலைதூக்கியது. உடனே தன் திருமண்டலத்தில் எல்லா ஆராதனைகளிலும்

முதல் வேதபாடம்,இரண்டாம் வேதபாடம் வாசிக்கும்போது மூன்றாம் வேதபாடமாக **இந்துமத புத்தகமான கீதையிலிருந்தும்** ஒரு பகுதி வாசிக்கலாம் என்றார். கேரளா இந்துமத மக்களின் பண்டிகையான **ஓணம் பண்டிகையை** கிறிஸ்தவ ஆலயத்தில் கொண்டாடவேண்டும் என்று ஆயர்களுக்கு கட்டளையிட்டார்.

' இந்த செய்தி கனம் **வேதநாயக சாஸ்திரியார்** அவர்களுக்கும் எட்டியது. உடனே அவர் ஒரு துண்டுபிரதி அச்சடித்து அனைத்து சிஎஸ்ஐ சபைகளும் அறியும் வணணமாக சிஎஸ்ஐ சபையினர் தங்கள் எதிர்ப்பை தெரிவித்து மாடரேட்டருக்கும் அவரவர் பிஷப்மார்களுக்கும் எதிர்ப்பு கடிதம் அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.


' நானும் என் சார்பில் அனைத்து பாஷைகளிலும் ஜாமக்காரன் மூலம் அவரவர் சிஎஸ்ஐ சபை கமிட்டி கூட்டி எதிர்ப்பு தீர்மானம் எழுதி மினிட்ஸ்ஸில் பதிவு செய்து சபை கமிட்டியாகவும், தனி அங்கத்தினராகவும் சிஎஸ்ஐ சினாட் விலாசத்துக்கு தாமதமில்லாமல் எழுதி அறிவிக்க கேட்டுக்கொண்டேன்.

## சிஎஸ்ஐ சினாட் ஆராதனை கிரமத்துக்கு

ஒவ்வொரு சிஎஸ்ஐ அங்கத்தினனும் ஒணம் பண்டிகை கிறிஸ்த ஆலயத்தில் கொண்டாடமாட்டோம் பாகுபலி என்ற செத்துப்போன அரசன் பூக்கள் அலங்கரித்த ஆலயத்தில் அல்லது வீட்டில் வந்து ஆசீர்வதிப்பார் என்பதை நாங்கள் விசுவாசிக்கமாட்டோம். **இயேசு வருவதையே விரும்புகிறோம்** என்று பிஷப் சாமுவேல் அமிர்தத்துக்கு எழுதி அறிவித்தனர்.

சபை மக்கள் கூட்டம் கூட்டமாக ஜெபம் ஏறெடுத்தனர். கர்த்தர் பதில் தந்தார். **பிஷப்.சாமுவேல் அமிர்தம்** மக்களின் எதிர்ப்பை கண்டவுடன் விருப்பமுள்ளவர்கள் ஒணம் ஆலயத்தில் கொண்டாடலாம் கட்டாயம் அல்ல என்று அறிக்கை விட்டார்.

முதல் எதிர்ப்பு கடிதமாக மெட்ராஸ் டையோசிஸ் St.George CSI Church கமிட்டியினர் எதிர்ப்பு தீர்மானம் எழுதி சிஎஸ்ஐ மாடரேட்டருக்கு அனுப்பினார்கள்.



ST. GEORGE'S CATHEDRAL
C. S. I. MADRAS DIOCESE

224, Cathedral Road,
P.B No. 4941
Madras-600 086

Rev. DAVID DEVAIRAKKAM
M.A., B.D. Dip. in Ger.
Presbyter-in-charge

Date: 11-03-1992

The Moderator
The Church of South India
Synod Office,
Madras-600 086

(ஆங்கில கடித (சுருக்கத்தின்) மொழிபெயர்ப்பு):

**சினாட்டில் நடத்தப்பட்ட வேத வசனத்துக்கு விரோதமான ஆராதனை கிரமத்தை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். எதிர்க்கிறோம்.**

Yours faithfully,

for and on behalf of the Members of St.George's Catedral

(F.V.N.Paul)
Secretary

(John Christopher)
Treasurer

(Kumar Asirvadham)
Asst. Secretary

இப்படி தென்னிந்தியாவின் 22 திருமண்டலங்களிலிருந்து எதிர்ப்பு கடிதங்கள் வந்தவுடன் சினாட் அலுவலகம் திணறிவிட்டது.

உடனே அன்றைய மாடரேட்டர் Most.Rev. Dr.RYDER DEVAPRIAM அவர்கள் கடிதம் எழுதினார். அவரின் பதில் சிறுபிள்ளைத்தனமாக இருந்தது.

**CHURCH OF SOUTH INDIA** (2)

THE SYNOD SECRETARIAT
222 Cathedral Road, P.B No. 4906 Madras-600 086 South India

Moderator
The Most Rev. Dr. B. RYDER DEVAPRIAM
MA. BT. BD. STM
Bishop's House,
Nandyal (RS) 518502
Kurnool Dt. A.P.

General Secretary
Prof. GEORGE KOSHY
MA. BA (Hons) Nottingham)
CSI Synod 222 Cathedral Road
Madras-600 086

Deputy Moderator
The Rt. Rev. JASON S. DHARMARAJ
M. A. B. D.
Bishop of Tirunelvely


Hon: Treasurer
Mr. D.P. KINGSLEY B. Com.
C A. I I B, C A I B (Londan) 66
Harringtonr RoadMadras-600 031

Ref. No. SND ........................

Date 18-3-'92

**கடிதத்தின் சுருக்கம்(ஆங்கில மொழிபெயர்ப்பு)**

**அன்று சினாட் கூட்டத்தில் நடத்தப்பட்ட ஆராதனை ஒழுங்கு AN EXPERIMENTAL PRAYER என்றும் அதை CSI சபைகளில் நடைமுறைப்படுத்தமாட்டோம் என்றும் எழுதினார்.**


Yours Sincerely

B. RYDER DEVAPRIAM
Moderator & Bishop in Nandyal

இப்படிப்பட்ட பதிலை எங்காவது கேட்டதுண்டா? எல்லா தெய்வங்களிலும் இயேசு இருக்கிறார், எல்லா தெய்வங்களும் ஒன்று என்பது எல்லா மதமும் சம்மதம் என்றாகுமே?

மாடரேட்டர் பதிலில் Experimental Prayer என்பது பரிசோதனைக்காக செய்யப்பட்டது என்று அர்த்தமாகிறதே பரிசோதனை செய்ய அது என்ன **கெமிஸ்டரி லேப்** என்று நினைத்தாரா? என்று ஜாமக்காரனில் எழுதினேன்.

இதற்கு பெயர்தான் நாடிபிடித்து பார்ப்பது என்பதாகும். இப்படிப்பட்ட ஜெபத்துக்கு எதிர்ப்பு வரவில்லையானால் அப்படியே CSI சபை ஆராதனை புத்தகத்தில் அச்சடித்து விடுவார்கள். நம் CSI மக்கள் ஆராதனை கிரமத்தில் என்ன எழுதியிருக்கிறது என்பதைகூட கவனிக்காமல் அன்று பிஷப்மார்கள் ஆமென் போட்டதுபோல் ஆமென் கூறிவிடுவார்களே?

**ஒரு வழியாக இப்படிப்பட்ட பிசாசின் ஆராதனைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.**

ஏராளமான **ஆயர்களும்,பிஷப்மாரும்**,சிஎஸ்ஐ கமிட்டி செயலர்கள்,அங்கத்தினர்கள் மற்ற சிஎஸ்ஐ பிஷப்மாரும் என்னை வெகுவாக புகழ்ந்து-வாழ்த்தி- ஜாமக்காரன் பணியினால் எங்கள் டையோசிஸ் நவீன உபதேசத்திலிருந்து தப்பினது.

டாக்டர் உங்களுக்கு நன்றி கூறுகிறோம் என்று கடிதங்கள் குவிந்தன.

# CSIயில் புது பிரச்சனை:



இதைப்போலவே CSI கிறிஸ்தவர்களுக்கு சட்டதிருத்தம் AMENDMENT என்ற புது பிரச்சனை பழைய மாடரேட்டர் **தேவகடாட்சம்** ஆரம்பித்து வைத்தது. புதிய மாடரேட்டார். **Rt.Rev.Dr.G.DYVASIRVADAM**, மத்திய கேரளா பிஷப்பும், Deputy Modarater அவர்களுமான Bishop.THOMAS K.OOMMAN அவர்களும் AMENDMENT நடைமுறைப்படுத்த அனைத்து திருமண்டல பிஷப்மார்களை மிரட்டி பணிய வைக்க முயற்சிக்கின்றனர். நான் இதை எழுதி உங்கள் கைகளில் கிடைக்கும்போது AMENDMENT நடைமுறைக்கு வந்து விட்டால் CSI நாசத்துக்கு போய்விடும். கொள்ளையடிக்கப்பட்டுவிடும்.

# ஆண்டது போதாதா- வாங்கிய கோடிகள் போதாதா?



**பண ஆசைக்கும், பதவி ஆசைக்கும் ஒரு அளவில்லையா?** தவறான வழிகளில் அமெண்மெண்ட் எலக்ஷன் நடத்திய இவர்களை தேவன் ஆசீர்வதிப்பாரா?. வேண்டாம்! அந்த அமெண்ட்மன்ட் நடை முறைப்படுத்தாமல் இருக்க ஜெபிப்போம்!. நான் எழுதியதை மொழிபெயர்த்து 24 டையோசிஸ்க்கு அனுப்பி உதவுங்கள்.

எனக்கு சிஎஸ்ஐயில் வாசல்கள் அடைந்தாலும் பரவாயில்லை. ஒரு வாசல் அடைந்தால் கர்த்தர் மறுவாசல் திறப்பார். அவர் திறப்பதை யாராலும் மூடமுடியாது. ஜெபிப்போம். செயல்படுவோம்...

உங்கள் விமர்சனங்களை எதிர்ப்பார்க்கிறேன். அனைத்து ஜாமக்காரன் வாசகர்கள் சார்பிலும் சில சி.எஸ்.ஐ பிஷப்மார்கள் சார்பிலும் இரகசியமாக பலர் எனக்கு கடிதம் எழுதி என்னை ஊக்குவித்தனர். அவர்கள் சார்பிலும் அனைத்து சிஎஸ்ஐ மக்கள் சார்பிலும் இந்த வேண்டுதல் சமர்ப்பிக்கிறேன்.

ஒருவேளை தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அந்த தீர்மானத்தை அனைவரும் ஐக்கியமாய் சேர்ந்து நின்று எதிர்த்தால் அதை வாபஸ் வாங்கிவிட சினாட் தீர்மானிக்கலாம். ஜெபிப்போம்.

**அமென்ட்மென்ட் தீர்மானம் நிறைவேறினால் பிஷப்,மாடரேட்டர் ஓய்வு வயது இரண்டு வருடம் கூடும்.** ஆனால் சட்ட விரோதமாக தீர்மானம் இயற்றிய அந்த இரண்டு வருட பதவியை நிறைவேற இவர்களுக்கு **ஆயுள் கூடுமோ? ஆரோக்கியம் கூடுமோ?**

- தீய நோக்கம் பாவமாம். நீதி 24:9
- தன் இருதயத்தை கடினப்படுத்துகிறவனோ தீங்கில் விழுவான். நீதி 28:14
- அதிபதியானவன் பொய்களுக்குச் செவி கொடுத்தால் அவன் ஊழியக்காரர் யாவரும் துன்மார்க்காராவார்கள். நீதி 29:12.
- ஆரம்பத்திலே துரிதமாய் கிடைத்த சுதந்திரம் முடிவிலே **ஆசீர்வாதம் பெறாது.** நீதி 20:21
- ஒரு மனுஷனுக்கு **செம்மையாய் தோன்றுகிற வழியுண்டு** அதின் முடிவோ மரணவழிகள். நீதி 16:25.
- கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும் அதனோடே அவர்(கர்த்தர்) வேதனையை கூட்டார். நீதி 10:22
- திருட்டு தண்ணீர் தித்திக்கும். நீதி 9:17.

# சிஎஸ்ஐ பிஷப்மார்களுக்கு ஜாமக்காரனின் ஆலோசனை:

இப்போது நடந்த சட்ட திருத்த மசோதா(AMEDNDEMNT) தேர்வு நியாயப்படி நடந்ததா? குறுக்கு வழியில் அந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதா என்பதை **கர்த்தருக்கு** முன்பாக, உங்கள் **மனசாட்சியை** கேளுங்கள். வெறும் சாதாரண **இரண்டு வருடம்** ஓய்வு வயதை கூட்ட இத்தனை பொய்களும்,ஏமாற்றுவழிகளும் கையாண்டு கர்த்தரிடம் நீங்கள் என்ன ஆசீர்வாதத்தை பெறபோகிறீர்கள். நீங்கள் நடப்பித்தது தவறு என்றால் **தேவ கோபம்** உங்கள் மேலும் உங்கள் சந்ததி மேலும் வருமே?. இயேசு பல முறை மன்னித்துவிடுவார் என்று எண்ணவேண்டாம். **ஆவியானவர் மனிதனோடு எப்போதும் போராடமாட்டார்.** எச்சரிப்பு! வந்துவிட்டது. பிறகு உங்கள் இஷ்டம்.

❖❖❖❖❖❖❖❖❖❖

# ECI சபைகளின் இணை பேராயர் Rt.Rev.S.Rajasingh அவர்கள் சபை ஆயர்களுக்கு அளித்த செய்தி:




## நாம் தினமும் 1 மணி நேரம் ஆலயத்திற்குள் தேவனோடு தனித்து அமர்ந்திருந்தால் என்ன நடக்கும்?

1. யோசுவா தேவ சமூகத்தைவிட்டு நீங்காதிருந்தான். பிற்காலத்தில் ஞானத்தின் ஆவியினால் நிரப்பப்பட்டான். அவனை ஒருவரும் எதிர்த்து நிற்க முடியவில்லை. அவன் காலடி வைத்த இடமெல்லாம் அவனுக்கு சொந்தமானது. இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களைப் பெறுவோம்.

2. இதுவரை விட்டுவிடமுடியாமல் இருந்த பாவ செய்கைகளும், தகுதியற்ற செய்கைகளும் நாம் அதிகம் போராடாமலே நம்மை விட்டு நீங்கும்.

3. புதிய பெலத்தை நம்மில் உணர்வோம். தாழ்வு மனப்பான்மை விலகும்,மனித பயம் விலகும், பாதுகாப்பின்மை உணர்வு விலகும். "கர்த்தர் பார்த்துக்கொள்வார்" என்ற உணர்வு உண்டாகும். ஆகவே பயமில்லாமல் நம் வாழ்வைக்குறித்த கவலையில்லாமல் எல்லாரிடமும் அன்பாயிருக்க ஆரம்பிப்போம். மக்களை ஆசீர்வதிக்கவேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் வந்துக்கொண்டே இருக்கும்.

4. நாம் கவர்ச்சிகரமான ஆளாக மாறுவோம். நம்மைத்தேடி நம் வாய்ப்பிறப்பை கேட்க மக்கள் வருவார்கள்.

5. நாம் தேவனால் பிறந்தவர்கள், தேவனால் நீதிமான்களாக்கப்பட்டவர்கள். தேவனால் அனுப்பப்பட்டவர்கள், தேவனால் அழைக்கப்பட்டவர்கள் என்ற உணர்வடைவோம். அப்போது நம்மால் முடியும்- முடியாது என்ற விதமான சிந்தனை குறைந்து நமக்களிக்கப்பட்ட தரிசனங்களைக் குறித்து தேவன் இதைச் செய்யப்போகிறார் என்ற விசுவாசத்தைப் பெறுவோம். செயல்படுவதற்கு தேவையான பரிசுத்தாவியின் கிருபைகளைப் பெறுவோம்.

6. நாம் தேவனுடைய ஊழியக்காரர் என்ற அழைப்பை திட்டமாய் அறிந்துக்கொள்வோம். தேவனுக்கு பிடிக்காத வேறெதிலும் நமக்கு நாட்டமில்லாமல் போகும். ஊழியத்தில் மனதிடமும் நம்பிக்கையும் உண்டாகும்.

7. மாம்சம் அழிய ஆரம்பிக்கும். **"என் அனுபவத்தால் திறமையால் நான் இவைகளை செய்கிறேன்"** என்ற விதமான மனுஷீக பெருமை எண்ணங்கள் குறைய ஆரம்பிக்கும். அப்பொழுது ஊழியத்தில் தேவ வல்லமை வெளிப்படும்.

8. நாம் அதிகாரம் செலுத்தி கட்டாயப்படுத்தாமலே மக்கள் நமக்கு கீழ்ப்படிவார்கள். மக்கள் நம்மை நம்புவார்கள். மாற்றுக் கருத்துக்களை நம்மிடம் தைரியமாய் பகிர்ந்துக் கொள்வார்கள். சூழ்நிலையில் விடுதலை உண்டாகும்.

9. நாம் செய்யவேண்டிய ஊழியங்கள் நமக்கு வெளிப்படுத்தப்படும். எப்படி செய்யவேண்டுமென்றும், அதில் வரக்கூடிய தடைகளும், அதை முன்னமே எப்படி தவிர்த்துக் கொள்ளமுடியும் என்பதையும் ஆவியானவர் நமக்கு கற்றுத்தருவார்.

10. செய்ததையே செய்துக்கொண்டிருக்கமாட்டோம். சூழ்நிலைக்கேற்ப ஆவிக்குரிய வளர்ச்சிக்கு நம் சபைகளுக்கு வேண்டி புதிதாக என்னவெல்லாம் செய்யவேண்டும் என்பதை ஆவியானவர் நமக்கு கற்றுத்தருவார்.

11. தேவன் நம்மோடு பேசினதை எவ்வளவு சீக்கிரமாய் மக்களுக்குச் சொல்லமுடியும் என்று ஆர்வம் நமக்கு உண்டாகும். பிரசங்கம் பண்ண ஆசையாயிருக்கும். நமது பிரசங்கங்கள் வித்தியாசமானதாக இருக்கும். புதிதாக இருக்கும். கிருபையும், அதிகாரம் பொருந்தியதாயிருக்கும்.

12. விசுவாசிகள் மீது அளவற்ற அன்பு உண்டாகும். மக்களை பார்க்கும்போதெல்லாம் கர்த்தர் எனக்குக் கொடுத்த என் மக்கள் என்ற எண்ணம் நமக்குள் உண்டாகும். இந்த நல்லெண்ணம் திருச்சபையின் ஒட்டுமொத்த சூழ்நிலையில் சமாதானத்தை உண்டுபண்ணும்.

13. திருச்சபையில் தானாக எழுப்புதல் உண்டாகும். ஆராதனையில் தேவ மகிமை வெளிப்படும். மக்கள் தங்கள் குற்றங்களை உணர்வார்கள். மனந்திரும்புவார்கள். மக்கள் ஜெபிக்க ஆரம்பிப்பார்கள். ஊழியம் செய்ய முன்வருவார்கள். திருச்சபை பெருகும்.

14. இறைவன் மேலும்,நம் மேலும் மக்களுக்கு ஒரு பயபக்தி உண்டாகும். மாம்ச எண்ணங்களோடும்,சுயநலங்களோடும், திருச்சபையில் போராடி கொண்டிருந்தவர்கள் பயப்படுவார்கள். அடங்குவார்கள்.

15. நமது குரலை, பேச்சை கேட்க மக்கள் ஆசைப்படுவார்கள். நமது பிரசங்கத்திலும், ஆலய ஆராதனை ஜெபத்திலும், கர்த்தர் மக்களோடு சொல்ல நினைக்கும் தீர்க்கதரிசனங்கள் இயல்பாக உண்டாகும். அதினால் மக்கள் ஆறுதலடைவார்கள். எச்சரிப்படைவார்கள். நல்லத் தீர்மானங்களைச் செய்வார்கள்.

நன்றி: நிருபம்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



## என்னோடு ஜெபத்துக்காக - ஆலோசனைக்காக தொடர்புக்கொள்ள விரும்புபவர்கள்:




கூடியவரை தொலைபேசியில் தொடர்புக் கொள்ளவேண்டாம்.
தொலைபேசியில் என் தொடர்பு கிடைப்பது கடினம்.
ஆகவே

நீங்கள் தெரிவிக்கவேண்டிய விஷயத்தை கடிதம் மூலமாகவும் அல்லது இ-மெயில் மூலமாகவும் தெரிவிப்பது நல்லது.

இ-மெயில் மூலம் எழுதுபவர்கள் ஒவ்வொரு முறையும் உங்கள் முழு விலாசத்தையும், உங்களுக்கு கொடுக்கப்பட்ட கணணி எண்ணையும் மற்றும் தொலைபேசி எண்ணையும் குறிப்பிடுவது அவசியம்.

செய்திகள்! செய்திகள்!!




## RSS தலைவர் நாட்டில் நடக்கும் ஜாதி கொலைகளை சிறு சம்பவங்கள் என்கிறார்:

‘ இந்தியாவில் **மாட்டிறைச்சி** சாப்பிடுபவர்களுக்கு எச்சரிக்கை விடும்முகமாக உத்திரபிரதேசத்தில் மாட்டிறைச்சி சாப்பிட்ட ஒரு வாலிபரை அடித்தே கொன்றனர்.

‘ காஷ்மீர் மாநிலம் பெரும்பான்மை மக்கள் இஸ்லாம் மதத்தை சார்ந்தவர்களாகும். அங்குள்ள எம்எல்ஏ ஒருவர் தன் வீட்டில் வைத்த விருந்தில் மாட்டுறைச்சி பிரியாணி பரிமாறியதால் அந்த எம்எல்ஏவை அடித்து தாக்கினர்.

‘ கடந்த 2015 அக்டோபர் மாதம் டெல்லி தலைநகர் அருகே தாழ்ந்த ஜாதியை சேர்ந்த ஒரு குடும்பத்தை வீட்டில் அடைத்து பூட்டி 2 குழந்தைகள் உட்பட அந்த குடும்பத்தையே பெட்ரோல் ஊற்றி துடிக்கதுடிக்க கொன்றனர். அந்த வீட்டை **ராஜ்புத்** என்ற உயர் ஜாதியை சேர்ந்தவர்கள் கொன்றதாக கண்டுபிடித்துள்ளார்கள்.

‘ 2015 அக்டோபர் மாதம் 27ம் தேதி இந்திய தலைநகர் டெல்லியில் உள்ள கேரள மாநில விருந்தினர் மாளிகையில் திடீரென டெல்லி போலீஸ் புகுந்து சமையல் அறை, குளிர்சாதன பெட்டி யாவையும் பரிசோதித்தது. இங்கு **பசுவின் இறைச்சி** பரிமாற்றப்படுவதாக தகவல் வந்தது என்றார்கள். இது இந்திய மக்களை குறிப்பாக கேரளா மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. ஒரு மனிதன் எதை சாப்பிடலாம் எதை சாப்பிடக்கூடாது என்பதற்குகூட சுதந்திரம் இல்லாத சூழ்நிலை BJP அரசில் இந்திய மக்களுக்கு ஏற்பட்டுவிட்டது. இதை வன்மையாக கண்டிக்கிறோம் என்று இந்தியாவில் அனைத்து கட்சிகளும் கண்டனம் தெரிவித்தனர். மக்கள் மட்டுமல்ல, முஸ்லீம் மக்கள் யாவரும் மாட்டிறைச்சியை விரும்பி சாப்பிடுபவர்கள். இதை அரசாங்கம் தடை செய்வது மனித உரிமை மீறலாகும்.

இப்படி பல கொலைகள், அசம்பாவிதங்கள் நாடு முழுவதும் பல இடங்களில் நடந்துள்ளது. இதற்கு RSS தலைவர்.மோகன் பகவத் மகராஷ்ட்ரா மாநிலம் நாக்பூரில் நடந்த விழாவில் பதில் அளித்தார்.

நடந்த கொடூரங்கள் யாவும் **பெரும் பிரச்சனையல்ல** இவைகள் யாவும் **சிறு** சம்பவங்களாகும். இதை பத்திரிக்கை,டிவிக்காரர்கள், BJP அரசாங்கத்தை வீழ்த்த ஊதி பெரிதுப்படுத்துகிறார்கள். அப்படிப்பட்ட செய்திகளை பெரிதுபடுத்துவதால் இந்து கலாச்சாரத்தை சிதைத்துவிடமுடியாது என்றார்.

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை குறித்து BJP மத்திய மந்திரி **வி.கே.சிங்** என்பவர் **யாரோ ஒருவர் நாயின் மீது கல் எறிந்தால்** அதற்கு BJP மத்திய அரசு பொருப்பல்ல என்று நாயை உதாரணப்படுத்தி பேசியது இந்திய மக்களிடையே மேலும் சர்சையை உண்டு பண்ணியது.

❖❖❖❖❖❖❖❖❖❖

# சவுதி இளவரசர் கைது:

அரேபியா தேசம் முழுவதையும் தன் பிடியில் வைத்திருப்பது **சவுதி சுல்தான்** ஆகும். **அரேபியா நாடுகள் அவனுக்கு** பயப்படும்.

அபுதாபியில் உலகிலேயே மிகப்பெரிய இஸ்லாமியர் தொழுதுக்கொள்ளும் மசூதியை கட்டினார்கள். இதை கேள்விப்பட்ட சவுதி சுல்தான் அந்த மசூதி கட்டுவதை நிறுத்த சொல்லிவிட்டான். சவுதி நாட்டில் உலகமே வியக்கத்தக்க பிரம்மண்டமான மசூதியை நாங்கள் கட்டியிருக்கிறோம். அதைவிட பெரிதாக யாரும் கட்டக்கூடாது என்று கூறிவிட்டப்படியால் உடனே அபுதாபி மசூதி சவுதி மசூதியைவிட சிறியதாக கட்டப்பட்டது.

அரேபியாவில் உள்ள மற்ற நாடுகளில் அமெரிக்கர்கள் ஆராதித்த பழைய கிறிஸ்தவ ஆலய்ங்களில் உச்சியில் காணப்பட்ட சிலுவையை சவுதி சுல்தான் நீக்கிவிட கட்டளையிட்டார். இப்படி சவுதி மன்னனுக்கு அடிமைப்போல அரேபியர்கள் இருக்கிறார்கள்.

‘ 2015 அக்டோபர் 27ம் தேதி நான் அபுதாபியில் நான் ஊழியம் செய்தபோது அங்கு துபாயில் அச்சடிக்கபட்டு வெளியான தினத்தந்தியில் **சவுதி இளவரசர் கைது** என்ற செய்தி நான் வாசித்து காட்டியபோது எல்லாருக்கும் ஆச்சரியம். இப்படிப்பட்ட செய்திகள் குறிப்பாக சவுதி அரச குடும்ப செய்திகள் ஒருநாளும் வெளியே தெரியாமல் பார்த்துக்கொள்வார்கள். ஆனால் அவர்களுக்கு தமிழ் தெரியாததால் தமிழ் செய்தி வெளியிடப்பட்டுவிட்டது.

**சவுதி இளவரசர்** அப்துல்மோஹசன் Bபின் வாலித் Bபின் அப்துல் அஜீஸ் என்பவர் தன் சொந்த விமானத்தில் லெபனான் நாட்டு தலைநகர் Bபெய்ரூட்டிலிருந்து போதை பொருளான **கேப்டகன்** என்ற ஆம்பிடமனி பெனிதில்லின் என்ற கடுமையான போதை பொருளை தன் சொந்த விமானத்தில் நிறைத்து அவைகளை பெட்டிபெட்டியாக அடுக்கி அதை எடுத்துக்கொண்டு புறப்படும்போது இளவரசனுடன்கூட நான்கு வாலிபர்களுடன் விமானம் புறப்படும் நேரத்தில் **சுங்க அதிகாரிகள்** கைப்பற்றி **சவுதி இளவரசனை** கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளவரசர் அகம்பாவத்துடன் கூறினான். நான் சவுதி இளவரசன் எதை வேண்டுமானாலும் செய்ய எனக்கு அதிகாரம் உண்டு. வீண் பிரச்சனை உண்டாக்கவேண்டாம் என்று கர்ஜித்தான். இந்த சம்பவம் லெபனான் நாட்டில் நடந்தது.

**லெபனான் நாடு** சவுதிக்கு கீழ்பட்டதல்ல, ஆகவே கைது செய்யப்பட்ட இளவரசனை என்ன செய்வார்கள் என்று தெரியவில்லை. கடத்திய போதை பொருள் இதுவரை வரலாறு காணாத அளவு மிக அதிகமான மதிப்புள்ள சுமார் இரண்டு டன் போதை பொருள் பிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. லெபனான் விமான நிலையத்தில் இவ்வளவு நிறைய போதைப்பொருள் பிடிப்பட்டது இதுதான் முதல் தடவையாகும்.

ராஜாவினால் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்பது பழைய காலம். ஆனால் இப்போது இளவரசர் கொண்டுபோக இருந்த போதை பொருள் பல லட்சக்கணக்கான வாலிபர்களின் வாழ்க்கையை அழிக்கும் கொடூரமான செயலாகும். கண்டுபிடிக்கப்படாமல் இதற்குமுன் கொண்டு போகப்பட்ட போதை பொருள் எவ்வளவோ?

‘ சவுதி ராஜா இப்போது வியாதி படுக்கையில் இருக்கிறார் என்ற செய்தியும் கசிய ஆரம்பித்துள்ளது. இவரின் மரணம் எப்போது வேண்டுமானாலும் சம்பவிக்கும் என்கிறார்கள். அப்படி மரித்தால் இனி பதவிக்கு வரும் சவுதி மன்னன் மரிக்க போகும் மன்னரைவிட கிறிஸ்தவர்களுக்கு எதிராக இருப்பாரோ? என்று தெரியவில்லை?.அரேபியா தேசத்தில் பல மாறுதல்களை எதிர்ப்பார்க்கலாம். ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# MUMBAI ANTHERI METHODIST CHURCH MEETING








**மும்பை அந்தேரி மெததடிஸ்ட் சபையில்** FMPB Scan **கூடுகை பயங்கர மழை நடுவே ஆசீர்வாதமாக நடந்தேறியது. மழையிலும் நல்ல கூட்டம் வந்தது.** Rev.Muthu **அவர்கள் ஜெபித்து ஆரம்பித்தார்.** Rev.Koilraj **அவர்கள் பம்பாயில் கட்டபோகும் ஜெபிக்கும் மண்டபம் கட்டுவதையும் குறித்து விளக்கினர். மஷனரிகள் தங்கி ஓய்வெடுக்கவும், வைத்திய சம்பந்தமாக வந்தால் அங்கு தங்கி ஆஸ்பத்தரிக்டகு போய் வரவும் இப்படி பல நல்ல திட்டங்களுக்காக அந்த பிரம்மாண்ட மண்டபம் கட்டுகிறார்கள். பலர் அந்த நல்ல காரியத்தில் பல லட்சங்கள் கொடுத்து தங்கள் பங்கை அளிக்க முன்வந்தனர். ஆண்டவர் நாமமம் மகிமைப்பட்டது. கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.**

# MUMBAI POISER METHODIST CHURCH MEETING





**இங்கு நடந்த கூட்டங்கள் யாவும் ஆசீர்வாதமாக அமைந்தது.** Rev.Gnanasigamani **அவர்கள் கூட்ட ஏற்பாடுகளை மிகவும் சிறப்பாக செய்திருந்தார். ஆண்டவர் நாமம் மகிமைப்பட்டது. கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.**




# 22 நாட்கள் வீடியோ கேம் விளையாடிய சிறுவன் பலி:

இரஷ்யாவில் தொடர்ந்து 22 நாட்கள் வீடியோ கேம் விளையாடிய சிறுவன் ரத்த உறைவால் உயிரிழந்தார்.

ரஷ்யாவின் பாஸ்கோர்டாஸ்டான் பிராந்தியம் சாலி நகரைச் சேர்ந்தவர் **ருஸ்டம்**(17). **"டிபென்ஸ் ஆப் ஏன்ஷியன்ட்ஸ்"** எனும் வீடியோ கேம் விளையாட்டு மீது அவருக்கு ஆர்வம் அதிகம்.

இரு கோஷ்டிகளுக்கு இடையே சண்டை நடப்பதுபோன்ற இந்த விளையாட்டை ஹீரோ தரப்பில் இருந்து சிறுவர்கள் விளையாடுகின்றனர்.

அண்மையில் நேரிட்ட விபத்தில் ருஸ்டமுக்கு கால் எலும்பில் முறிவு ஏற்பட்டது. இதனால் படுக்கையில் இருந்த அவர் முழுநேர வீடியோ கேம் விளையாடத் தொடங்கினார். சாப்பிடுவது, தூங்குவதை தவிர மற்ற நேரங்களில் வீடியோ கேமில் மூழ்கினார். இவ்வாறு இரவு-பகலாக தொடர்ந்து 22 நாட்கள் வீடியோ கேமில் ஈடுபட்டுள்ளார். திடீரென ஒருநாள் ருஸ்டம் மயங்கி சரிந்தார். உடனடியாக அவரை அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தனர். அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக டாக்டர்கள் தெரிவித்தனர். வீடியோ கேம் பாதிப்பால் ரத்த உறைவு ஏற்பட்டு ருஸ்டம் உயிரிழந்திருப்பதாக டாக்டர்கள் விளக்கம் அளித்துள்ளனர்.

வளரிளம் பருவத்தினரை பெற்றோர் சரிவர கவனிக்காததே இத்தகைய துயரத்துக்கு முக்கிய காரணம் என்று மனோதத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

**ஜாமக்காரன் வாசகர்கள் ஜாமக்காரனுக்கு செய்யவேண்டிய உதவி:**

உங்கள் ஊரில் அற்புத ஊழியர்கள் நடத்தும் எந்தக்கூட்டங்களில் **சர்க்கரைவியாதி** சுகமானது, **கேன்சர் வியாதி** சுகமானது, **எய்ட்ஸ் வியாதி** சுகமானது என்று மேடையேறி சாட்சி சொன்னவர்கள் அல்லது பத்திரிக்கையில் புகைப்படத்துடன் வெளிவந்த சாட்சியை எழுதியவர்களின் **முழுவிலாசத்தை** மட்டும் எப்படியாவது பெற்று எனக்கு அனுப்புங்கள்.

**பொய் பேசும் ஊழியர்கள்** என்ற தலைப்பில் ஒவ்வொரு ஜாமக்காரனிலும் ஒரு பக்க செய்தி வெளியிட பலர் கேட்டுள்ளார்கள். அது கிறிஸ்தவர்களிடையே ஒரு விழிப்புணர்வை உண்டாக்கும். இப்படி ஜாமக்காரனில் அவைகளை வெளியிடுவதின் மூலம் அந்த குறிப்பிட்ட **ஊழியர்களும்** அந்த பொய்யை அல்லது **பொய்யான வெளிப்பாட்டை** அவர்களின் மேடைகளில் கூற தயங்கலாம். அது அவர்களுக்கும் நல்லது. கர்த்தரின் நாமம் மைதானத்தில் பொது மக்களிடையே தூஷிக்கப்படமலிருக்கும். இதை ஒரு ஊழியம்போல வாசகர்கள் யாவரும் செய்யுங்கள்.



Rt Rev Dr M C Mani

# மரண அறிவிப்பு

மத்திய கேரளா CSI டையோசிஸ் முன்னாள் பிஷப் **Rt.Rev.** மானி அவர்கள் தன் 84ம் வயதில் கர்த்தருக்குள் நித்தியடைந்தார். அவர் வாழ்ந்த காலத்திலும் ஓய்வுபெற்ற பிறகும் டையோசிஸ்ஸின் பிஷப்மார்களை நியமிக்கும் கிங்மேக்கராக இவர் இருந்தார். CSI சினாடிலும் அவருடைய வார்த்தைக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. இவர் மகனும் Dr.M.M.பிலிப் அவர்கள் CSI சினாடின் பல வருடங்கள் பொது செயலாளராக இருந்தார். இவர் குடும்பம் கேரளத்தில் மல்லபள்ளி என்ற ஊரில் பெரிய குடும்ப பரம்பரையை சேர்ந்தவர்கள். இவர்கள் யாவரும் என்மேல் மிகவும் மரியாதையும் கொண்டவர்கள். இவர் மரணம் மூலம் பாதிக்கப்பட்ட இவர் குடும்பத்துக்கும் மத்திய கேரளா டையோசிஸ் ஆயர்களுக்கும் கர்த்தர் ஆறுதல் அளிப்பாராக. இவர் மரிக்கும் முன் கீழே விழுந்து தோள்பட்டை எலும்பு முறிந்து படுக்கையில் இருந்தபோது நேரில் சென்று ஜெபித்தேன். ஜெபிக்கும்போது அவர் என் கையை பிடித்துக்கொண்டு ஜெபிக்க ஆரம்பித்தார். அந்த நிகழ்ச்சி என் கண்முன் இப்போதும் உண்டு.

**NOVEMBER 2015**

# Printed Book/Book Post

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.